www.tamilarangam.net 

# அறிவொளி

சுடர்: 1 வெளியீடு: அரசியற் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள். ஜனவரி 1991 பொறி: 1



லெப்டினன்ட் கேணல் போர்க்

www.tamilarangam.net


# அறிவொளி

கண்ணோட்ட மில்லவர்
கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையு மில்

சுடர்: 1 பொறி: 1


உரமேறிய எமது கரங்கள் மேலும், மேலும் உறுதிபெறட்டும்!

சிங்கள பேரினவாதிகளின் கொட்ட மடக்கிடும் ஆயுதங்கள் ஏந்திட அவை மேலும், மேலும் வலிமை பெறட்டும்!

அவ்வளவு மாத்திரந்தானா? இல்லை.

ஊழல், சுரண்டல், ஏற்றத்தாழ்வு, சாதிமத குரோதங்கள், ஆண் ஆதிக்கம் ஆகியன நிறைந்த இத் தீய சமூக அமைப்பையும், இயற்கையை நாசம் செய்யும் வகையில் நிலவும் தொழில் ஒழுங்கையும் உடைத் தெறிந்து புதிய தமிழீழம் படைத்திடவும் அவை ஓங்கி உயரட்டும்.

யுத்தம் எமது முடிவல்ல; அது ஒரு வழிவகை மாத்திரமேதான். புதியதோர் சுதந்திர தமிழ் ஈழமே எமது முடிவாகும். புலிகளாகிய நாம் வெறுமனே இராணுவ சிப்பாய்களல்லர். தீமைகள் மிகு உலகினை அழித்து துவம்சம் செய்யும் நாம் இதை மேலும் தொடர்வோம் இது உறுதி. அதேவேளை புத்துலகு படைத்துப் பாதுகாக்கும் நாம் அதையும் மேலும் தொடர்வோம்; இதுவும் உறுதி. சுருக்கிச் சொன்னால் நாம் சுதந்திர தமிழ் ஈழ படைப்பாளிகள்; அதன் பாதுகாவலர்கள்.

எம்மால் மாற்றியமைக்கப்பட்டுவருவது புற உலகு மாத்திரமல்ல, அதனுடன் சேர்ந்து நாமும், எமது கண்ணோட்டமும் மாற்றமடைந்து வருகின்றது. நிலவும் காலனியல் கல்வியின் தீய விளைவுகளும், பேரினவாத போதனைகளும், பழமைவாத சமூக ஒழுங்கு முறைகளும், சுரண்டும் வர்க்கத்தின் கருத்தாதிக்கங்களும், ஆட்சிக் கலையைப்பற்றிய முன் அனுபவமின்மையும், தப்பபிப்பிராயங்களும் எம்மிடமிருந்து தூக்கி எறியப்பட வேண்டும். நாம் வாழும் சமூகத்தின் அனைத்து நிகழ்வுகள் பற்றியும் புதியதோர் கண்ணோட்டத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். புறஉலகம் ஒவ்வொருநாளும் புதிய புதிய பரிமாணத்துள் தன்னை உட்படுத்திக் கொண்டேயிருக்கின்றது. எமது உலக கண்ணோட்டமும் அதற்கொப்ப தொடர்ந்தும் நெறிப்படுத்தப் படவும், வளர்க்கப்படவும் வேண்டும்.

இவ்விதம் செய்யத்தவறுபவன் கண்ணில்லாத கபோதியாகிவிடுவான். வழி தெரியாது தட்டுத்தடுமாறும் குருடனாகி விடுவான்.

புலிப்போராளிகளாகிய நாம் அரசியற் போராளிகள் என்ற தரத்தில் முன்னேறி, சுதந்திர தமிழீழ சிற்பிகளாக பிரகாசிப்போம். இம் முயற்சியில் சளைத்துவிடாது தொடர்ந்து ஈடுபடுவோம்!

இதற்காக தமிழ் ஈழ விடுதலைப் புலிகளாகிய எம்மால் மேற்கொள்ளப் பட்டுவரும் முயற்சிகளில் ஒன்றாக வெளிவந்து உங்கள் கரங்களில் தவழும் இந்த அறிவொளியை முழுமையாகப் பயன் படுத்துங்கள்.

வாசிப்பதுடன் நின்றுவிடாது கசடறக் கற்க!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொருளாதார முற்றுகையின் அரசியல் நோக்கம்.

தமிழ் ஈழத்திற்கெதிரான யுத்தம் பிரகடனப்படுத்தப்பட்ட நாளில் இருந்து சுமார் மூன்று மாதங்கள், தமிழ் ஈழம் குறிப்பாக வட-மாகாணம் பொருளாதார முற்றுகைக்குள்ளாகியிருந்தது. 1990ம் ஆண்டு செப்ரம்பர் மாதம், அது மெதுவாக தளர்த்தப்பட்டுள்ளது. ஆனாலும் பொருளாதார முற்றுகை இன்னமும் நிறுத்தப்படவில்லை. வடக்கு மாகாணம் தமிழ் மக்களை மாத்திரம் தனித்து கொண்டுள்ளதனாலேயே பொருளாதார முற்றுகை என்பது சாத்தியமானதாகவுள்ளது. வடக்கிற்கும், கிழக்கிற்குமான இணைப்பு தடைசெய்யப்பட்டுவிட்டது. வடக்குமாகாணத்தையும் தெற்கையும் இணைக்கும் இருபிரதான வீதிகளான கண்டி வீதி, செட்டிகுளம் மன்னார் வீதி ஆகியனவற்றை அரசு தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளது. வவுனியா, மன்னார் ஆகிய இரு எல்லைப்புற நகரங்களும் அரசின் கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளன

இவ்வித பொருளாதார முற்றுகையின் நோக்கம் தமிழ் ஈழத்தைப் பட்டினி போடவைப்பது என்பதாகவே அமைந்திருந்தது. பட்டினியையும் ஓர் ஆயுதமாசப் பயன்படுத்த அரசு முயற்சித்தது. பட்டினிக்குள்ளான மக்கள் இப்பிரதேசத்தை விட்டு அகதிகளாக வெளிக்கிளம்புவார்கள் என அரசு எதிர்பார்த்தது; கண்டவாக்கில் விமானத்தாக்குதல் நடத்துதலையும் துணையாக இணைத்துக் கொண்டது. யாழ்குடாநாட்டு மக்கள் குடாநாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்பதை அரசு பகிரங்கமாகவே அறிவித்தது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் இராணுவ சுற்றிவளைப்பினால், இராணுவத்தால் தரைமார்க்கமாக நடமாடித்திரிய முடியாத நிலையே இருந்தது. இதனால் இவர்களால் உணவுப் பொருட்களை அழித்தல், உணவு விநியோகமார்க்கத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரல், மக்களை கிராமத்தை விட்டு துரத்தியடித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது போய்விட்டது. (இதற்காக தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் செய்ததியாகம் கொஞ்ச நஞ்சமல்ல) பரந்தனிலும், மண்டைதீவிலும் இராணுவம் நடந்துகொண்ட முறையும், மக்கள் அங்கிருந்து அகதிகளாக வெளியேறியதும் இதற்கு சிறந்த உதாரணங்களாகும். வவுனியா நகரை அண்டிய பகுதியிலும் எல்லையோர கிராமமான செட்டிகுளத்திலும் இந்நிலைமை தோற்றுவிக்கப்பட்டது.

இப்பகுதிகளில் இருந்து வெளியேறிய அகதிகளையும், விமானக் குண்டு வீச்சு தாக்கத்தினால் வெளியேறிய அகதிகளையும், கிழக்கு மாகாணத்தில் இருந்து வெளியேறிய அகதிகளின் ஒரு பகுதியினரையும், பட்டினியில் இருந்து தப்புவதற்காக அகதிகளாக வெளியேறியவர்களையும் அகதிமுகாம்களில் வைத்து பராமரிப்பது என்பது ஒரு சுலபமான காரியமல்ல. எந்த ஒரு அரசாங்கமோ, அரச சார்பற்ற சர்வதேச அபிவிருத்தி நிறுவனங்களோ எதுவித உதவியும் செய்யாத நிலையில், சிறிலங்கா அரசின் பொருளாதார முற்றுகையின் மத்தியில், இவ் அகதி

> *"பட்டினியால் அவதியுறும் மக்கள், உணவுப் பொருட்களுக்காக ஆலாய் பறக்கும் மக்கள், விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தூற்றவும், வெறுக்கவும் ஆரம்பிப்பார்கள் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது. ஒரு புறத்தில் பட்டினி போடுவதற்கான தயார்ப்புகள் செய்திருந்த அதே வேளையில், மறுபுறத்தில், மக்களின் பட்டினியைக் கண்டு பரிதவிப்பது போல் நடித்துக் கொண்டது தனது பிரச்சார சாதனங்களின் மூலம் அதற்கான பழியை விடுதலைப்புலிகளின் மேல் சுமத்தியும் வந்தது. மக்களை விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மேல் வெறுப்புக் கொள்ள வைத்து தனது தலையாட்டிப் பொம்மையாகச் செயற்படும் "தமிழ்த் துரோகிகள்" செயற்படுவதற்கு வாய்ப்பான ஒரு களத்தை உருவாக்கிக் கொடுக்கவும் முயற்சிக்கின்றது."*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள் இங்குவைத்து இன்னமும் பராமரிக்கப்படுகிறார்கள் என்றால், அது எமது தேசிய விடுதலை யுத்தத்தின் வளர்ச்சிகளின் ஒன்றாகவே கருதப்படவேண்டும். உணவுப் பொருள் விநியோகத்தையும், அகதிகள் முகாம் நிர்வாகத்தையும் தமது நெறிப்படுத்தல்களின் கீழ் வைத்துள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உணவு விநியோகம் சீராக நடைபெற அரும்பாடுபட்டு வருகிறது

ஓர் பகுதியினர் இந்தியா சென்றிருப்பது துர் அதிர்ஷ்டமானதுதான் இந்தியாவில் இன்று அமைக்கப்பட்டுள்ள அகதிமுகாம்கள் உண்மையிலேயே ஒருவகை தடுப்ப முகாம்களாகவே இருக்கின்றன. இந்தியா சென்றுள்ள அகதிகள் தமிழ் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாகக் குடியேற்றப்படுவார்கள். அவர்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ள முடியாத சிறுசிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுவிடுவார்கள். முகாங்களில் உள்ளவர்கள் வெளியாட்களுடன் தொடர்பு கொள்வதுவும், அவர்களின் சுதந்திரமான நடமாட்டமும் கட்டுப்படுத்தப் படுகின்றன. அவர்கள் எப்போது இங்கு வரலாம் என்பதையும் இனி இந்திய மத்திய அரசே முடிவெடுக்கும். அவர்களாக வரமுடியாது. இந்திய மத்தியஅரசே அவர்களை இங்கு இனி அனுப்பிவைக்கும் இந்தியாவில் அமைந்துள்ளவை அகதிமுகாம்களல்ல, போராட்டத்தில் இருந்து மக்களைப் பிரித்து, தனிமைப்படுத்தி அவர்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் தடுப்பு முகாம்களேயாகும்.

இலங்கை அரசும் அகதிமுகாம்கள் என்ற பெயரில் இவ்விதமான தடுப்பு முகாம்களை உருவாக்கவே முயற்சிக்கின்றது. வடக்கு மாகாணத்தில் அதன் முயற்சி இதுவரை வெற்றி பெறவில்லை; இனியும் வெற்றிபெற விடக்கூடாது. இலங்கை அரசின் தடுப்பு முகாம்களில் களையெடுப்புகளும், பழிவாங்கல் கொலைகளும், பெண்பிடிக்கும் அலுவல்களும் நடைபெறும். முகாம்களில் தங்கி இருக்கும் மக்களிடமிருந்து தகவல்கள் பெற்றுக் கொள்ளவும். கிராமத்திற்குள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் முயற்சிக்கப்படும். இவ்வித தடுப்பு முகாம்களின் அமைவைச் சாத்தியப் படுத்துவதற்காகவே பொருளாதார முற்றுகையும், பொருளாதார அழிவு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

பொருளாதார முற்றுகையின் நோக்கம் இத்துடன் நின்று விடவில்லை. பட்டினியால் அவதியுறும் மக்கள், உணவுப் பொருட்களுக்காக ஆலாய்பறக்கும் மக்கள், விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தூற்றவும், வெறுக்கவும் ஆரம்பிப்பார்கள் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது ஒரு புறத்தில் பட்டினி போடுவதற்கான தயாரிப்புகள் செய்திருந்த அதேவேளையில், மறுபுறத்தில், மக்களின் பட்டினியைக் கண்டு பரிதவிப்பது போல் நடித்துக் கொண்டது. சிறீலங்கா அரசு தனது பிரச்சார சாதனங்களின் மூலம் அதற்கான பழியை விடுதலைப் புலிகளின் மேற் சுமத்தியும் வந்தது. மக்களை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மேல் வெறுப்புக் கொள்ளவைத்து தனது தலையாட்டிப் பொம்மையாக செயற்படும் 'தமிழ் துரோகிகள்' செயற்படுவதற்கு வாய்ப்பான ஒரு களத்தை உருவாக்கிக் கொடுக்கவும் முயற்சிக்கின்றது.

ஆகவே, பொருளாதார முற்றுகையை உடைத்தெறியவும், மக்களைப் பட்டினியில் இருந்து காக்கவும் முயற்சி எடுக்கும் அதே வேளையில், இன்றைய சோற்றிலும் விட நிரந்தர சுதந்திரம் ஆயிரம் மடங்கு மேலானது என்ற அரசியல் உணர்வை ஏற்படுத்தவும், பஞ்சத்தையும் பட்டினியையும் தாங்கி நிற்கக் கூடிய மனோபலத்தை உருவாக்கவும் மக்கள் மத்தியில் தீவிர அரசியல் பிரச்சாரம் மேற் கொள்ளப் பட வேண்டும்.

## முதலாவது சிங்கள குடியேற்றம்

''வவுனியா மாவட்டமும் முல்லைத்தீவு மாவட்டமும் சேர்ந்த பகுதியே அப்பொழுது வன்னி என்று அழைக்கப்பட்டது. வவுனியா மாவட்டத்தில் 97வீதம் தமிழரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 92வீதம் தமிழரும் வாழ்ந்தனர். 1891ஆம் ஆண்டிலே நடத்திய குடிசனத் தொகைக் கணக்கின்படி, வவுனியா மாவட்டத்தில் 970 சிங்கள மக்களே இருந்தனர். முல்லைத்தீவு வட்டாரத்தில் இரண்டு சிங்களவர் வியாபாரத்தின் பொருட்டு மட்டும் காலியிலிருந்து சென்றிருந்தனர். இக்கணக்கெடுப்பு, யாழ்ப்பாணத்திலுள்ள கரவெட்டியில் இருந்து நெசவுத் தொழிலாளர் நூற்றுக்கு மேற்பட்டோர் முள்ளியவளையிற் சென்று குடியேறினர் என்று காட்டுகின்றது. மண்டுக் கோட்டை அல்லது மடுக்கந்தை என்று வழங்கப்படும் ஊரிலேயே முதற் சிங்களக் குடியேற்றம் ஏற்பட்டது. 1810ஆம் ஆண்டில் அங்கு 30 சிங்களக் குடிகளே இருந்தன. வவுனியாவில் அப்போது 4 தமிழ் பௌத்தர்களும் 3 சிங்கள இந்துக்களும் இருந்தனரெனக் கணக்கெடுப்புக் காட்டுகிறது.

ஜே. பி. லூயிஸ், ''வன்னிக் கைந்நூல்'' 1895



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈராக் – அடாவடித்தனமா? ... தேசிய எழுச்சியா?

ஆபிரிக்காவையும், அரேபிய நாடுகளையும் தமது காலனி நாடுகளாகவும், தமது ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடுகளாகவும் வைத்திருப்பதற்கு அமெரிக்காவும், ஏனைய மேற்கு ஐரோப்பிய நாடுகளும் தம்மால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகின்றன. தென் ஆபிரிக்காவையும், இஸ்ரவேலையும் ஆயுத பாணிகளாக்கி, அவ் இரு நாடுகளையும் கொண்டு ஆபிரிக்க நாடுகளையும் அரேபிய நாடுகளையும் மிரட்டியும், அடக்கியும் வருகின்றன.

தென் ஆபிரிக்காவையும், இஸ்ரவேலையும் பொறுத்து ஐக்கிய நாடுகள் சபை பல தீர்மானங்கள் மேற்கொண்டாலும், அவற்றில் எதையும் நிறைவேற்றுவதற்கு அமெரிக்காவோ, மேற்கு ஐரோப்பிய நாடுகளோ இடமளிக்கவில்லை. தென்னாபிரிக்காவிற்கு எதிராக பொருளாதாரத் தடைகள் மேற்கொள்ள வேண்டும் என்று உலக நாடுகளின் வெவ்வேறு ஸ்தாபனங்கள் பலதடவைகள் முடிவெடுத்தும் பிரித்தானியா வெளிப்படையாகவும், பகிரங்கமாகவும் அத்தீர்மானங்களை மீறியே செயற்பட்டு வந்துள்ளது; இன்றும் செயற்பட்டு வருகின்றது. அதே போல் பாலஸ்தீனியர்களினதும் ஏனைய அரேபிய மக்களினதும் தாயக பூமியை ஆக்கிரமித்து வரும் இஸ்ரவேலின் நடவடிக்கைகளைக் கண்டித்து உலக நாடுகளின் ஸ்தாபனத்தால் எடுக்கப்பட்ட சகல தீர்மானங்களையும் அமெரிக்கா பகிரங்கமாகவே மீறி வந்துள்ளது; இஸ்ரவேலின் நடவடிக்கையை ஊக்கப்படுத்தி வருகின்றது; இஸ்ரவேலை ஒரு அணு ஆயுத வல்லரசாக மாற்றுவதில் வெற்றியும் கண்டுள்ளது. இவ்விரு நாடுகளும் மேற்கத்திய வல்லரசுகளால் தோற்றுவிக்கப்பட்ட நாடுகளாகும்.

இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்பிருந்து ஆபிரிக்க நாடுகளும் அரேபிய நாடுகளும் தென் ஆபிரிக்காவிற்கும், இஸ்ரவேலிற்கும் எதிராகவும், மேற்கத்திய வல்லரசுகளிற்கு எதிராகவும் போர்க் கொடிதூக்கி வருகின்றன. இப்போர்தான் இந் நாடுகளின் வரலாறு என்று சொன்னால் அதுமிகையாகாது. மேற்கத்திய வல்லரசுகளுக்கு எதிரான போராட்டத்தில் காலத்துக்குக்காலம் வெவ்வேறு நாடுகள் முன்னணிப்பாத்திரத்தை வகித்து வருகின்றன. எகிப்துடன் இவ்வரலாறு ஆரம்பமாகின்றது. இம் முன்னணிப்பாத்திரம் அல்ஜீரியா கென்யா, சாம்பியா, தன்சானியா, சூடான், லிபியா, ஈரான் ஆகிய நாடுகளிடம் காலத்துக்கு காலம் சென்று, இன்று, அப்பாத்திரம் ஈராக்கிடம் சென்றுள்ளது. 1970களின் பின், பாலஸ்தீனம் மேற்கத்தைய வல்லரசை எதிர்ப்பதில் பிரதான முன்னணி நாடாகத் திகழ்ந்து வருகின்றது.

பாரசீக வளைகுடாப் பிராந்தியத்தில் உள்ள இராணுவ, பொருளாதார பலம் மிக்க நாடுகளில் ஈராக்கே முதன்மையானது என்பது நிரூபணமாகியுள்ளது. இஸ்ரவேலையும், தென் ஆபிரிக்காவையும் தவிர்த்து நோக்கினால் அரேபியா, ஆபிரிக்கா இரு பிராந்தியங்களிலும் உள்ள முதன்மைபெற்ற பலம் மிக்க நாடு ஈராக்கேயாகும். ஈராக்கின் இந்த வளர்ச்சி அரேபிய உலகில் இதுவரை இருந்து வந்த இராணுவ சமநிலையில் ஒரு மாற்றத்தை உருவாக்கப் போவது நிச்சயமாகிவிட்டது. இஸ்ரவேலின் தனிக்காட்டு ராஜாத்தனம் இனியும் பலிக்காது என்பதுவும் நிச்சயமாகிவிட்டது.

பாரசீக வளைகுடா பிராந்திய இராணுவ சமநிலையை மீண்டும் சாதகமானதொன்றாக மாற்றுவதில் மேற்கத்தைய வல்லரசுகள் இன்று மும்முரமாக ஈடுபட்டுள்ளன. ஈராக்கின் ஆக்கிரமிப்பில் இருந்து சவுதி அரேபியாவை பாதுகாக்கவும், ஈராக்கிற்கு எதிராக பொருளாதார தடை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற

> தோற்றலும் வெற்றிப் பாதை
> தொடர்வதும் உலக நீதி
> ஆற்றலும் புகழும் பண்பும்
> அவனியில் நிலைத்து நிற்கும்
> காற்றிலா விடினும் வாழ்வோங்
> கனவிலும் அடிமைத் தாழ்வை
> ஏற்றிடோம் எனப்போர் செய்த
> ஏந்தல் பண்டார வன்னி.
>
> *(பண்டார வன்னியன் விழா மலர்)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் சரியாக நிறைவேற்றப்படுவதை உத்தரவாதப்படுத்தவும், என்ற சாக்குப்போக்கில் மேற்கத்தைய நாடுகளின் ஆக்கிரமிப்புத் துருப்புக்கள் பாரசீக வளைகுடாவினுள் குவிக்கப்பட்டு வருகின்றன. ஐ. நா. சபை தீர்மானம் மேற்கொள்வதற்கு முன்பாகவே இத்துருப்புக்கள் இங்கு வந்துசேர்ந்து விட்டன என்பதையும், ஐ. நா. சபையின் அனுமதியின்றியே இவை வந்தன என்பதையும் இங்கு குறிப்பிட்டுக் காட்ட வேண்டியது அவசியமாகும். ஐ. நா. சபை தனது கடமையை நிறைவேற்றுவதற்கு தனது சொந்தப்படையை அனுப்புவதே வழமையாகும். இப்படை ஒரு நாட்டை தாக்குவதற்குரிய ஆயுத தளபாடங்களையும், இராணுவ கட்டமைப்புகளையும் கொண்டதாக இராது.

வளைகுடா பிரச்சினையில் தன்னையும் தனது மேற்கத்தைய கூட்டாளிகளையும் தவிர வேறு எவரும் (ஐ. நா. சபை உட்பட) தலையிடுவதை அமெரிக்கா விரும்பவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது. இப்படைகள் எப்போது என்ன வழியில் பின்வாங்கும் என்பதுவும், என்ன வகையான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதுவும் அமெரிக்காவின், முடிவில் தங்கியுள்ள ஒரு விடயமாகவே மாற்றப்பட்டுள்ளது. முழு உலகுக்கும் தானே எஜமான் என்பதை நிலைநிறுத்துவதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள அமெரிக்கா முயற்சிக்கின்றது.

ஈராக் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடு என்பது உண்மையே. ஆனால், அதே நேரத்தில் ஈராக் தான் ஒரு பிராந்திய வல்லரசாகவும் மாறமுற்படுவதை நாம் இங்கு கணக்கில் கொள்ள வேண்டும். தனது சொந்த நாட்டில் குர்டிஷ் மக்களை பல ஆயிரக்கணக்கில் இரசாயனக் குண்டுகள் பயன்படுத்தி கொன்று குவித்தது, தேசிய எழுச்சியோ, ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கையோ அல்ல. அது ஒரு தேசிய ஒடுக்குமுறையேயாகும். அதே போல் அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு வெளிவந்த இனம், ஈரானுடன் ஒரு நீண்டகால யுத்தத்தை நடத்தியது. பிராந்திய மேலாதிக்கப்போக்கின் ஒரு வெளிப்பாடேயாகும். இன்று குவைத்துடன் நடந்து கொண்டுள்ள முறைகூட ஒருவித தேசவிஸ்தரிப்புப் போக்கேயாகும். குவைத்தின் எண்ணைவளங்களை அனுபவித்து வந்தது மேற்கத்தைய வல்லரசுகளும் ஜப்பானுமேயாகும் என்பது உண்மையே. குவைத்தின் பணம் ஏகாதிபத்திய நாடுகளின் மூலதனமாகவே செயற்பட்டன என்பதுவும், குவைத்திற்கும் ஈராக்கிற்கும் இடையே எல்லை மோதல் இருந்து வந்தது என்பதுவும், இது அமெரிக்காவிற்கே சாதகமாக இருந்து வந்துள்ளது என்பதனைத்தும் உண்மையேயாகும். குவைத்திற்கு எதிரான நடவடிக்கை மேற்கத்தைய வல்லரசுகளுச்கு கடுமையான ஒரு பொருளாதாரத்தாக்கத்தை ஏற்படுத்தியுளதும் உண்மையே.

இவையெல்லாம் எவ்விதம் உண்மையாகவுள்ளனவோ அதே போல், ஈராக்கின் இப்பிராந்திய மேலாதிக்கப் போக்கு அமெரிக்காவிற்கு ஒரு இராணுவ வாய்ப்பாக அமைந்து விட்டது. ஈராக்கின் நட்பு நாடுகளும், அமெரிக்க எதிர்ப்பு நாடுகளும் ஈராக்கிற்கு தமது ஆதரவை வெளிப்படையாகவே வழங்க முடியாத ஒரு இக்கட்டான நிலையைத் தோற்றுவித்துள்ளது. பல வளைகுடா நாடுகளின் மக்கள் ஈராக்குடனும் தம்மை இனங்காட்டிக் கொள்ளவும் முடியாத அமெரிக்காவை தம்மால் எதிர்க்கவும் முடியாத ஒரு இக்கட்டான நிலைக்குள்ளாகியுள்ளார்கள் என்பதுவும் உண்மையேயாகும்.

ஈராக் தனது பிராந்திய ஆதிக்கவாத தன்மையைக் களைந்து, ஏனைய அரேபிய நாடுகளுடனும் இணைந்து குவைத் பிரச்சனைக்கு ஒரு அரசியல் தீர்வைக் காண்பதே ஈராக்கிற்கும், முழு அரேபிய உலகிற்கும் நல்ல முடிவாக இருக்கும்.

அமெரிக்கர்களுக்கு பணியக் கூடாது. அதே வேளை குவைத்துடன் பிராந்திய மேலாதிக்கத்தனம் காட்டவும் கூடாது. அதுதான் ஈராக்கையும் முழு அரேபிய உலகையும் இவ் இக்கட்டில் இருந்து விடுவிக்கும் ஒரேபாதையாகும்.

## வீணன்

தன்பெண்டு தன்பிள்ளை சோறுவீடு
சம்பாத்தியம் இவையுண்டு தானுண்
டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங்
கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்.

— பாரதிதாசன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அனைத்தும் செஞ்சேனைக்காக!
# ருஷ்ய அனுபவம் முற்றுகையின் முன்பாக

(1918ன் கோடைகாலத்தில் நடைபெற்ற சம்பவம்)

*1917இல் ருஷ்யாவில் ஜார் மன்னனுக்கு எதிரான புரட்சி நடைபெற்றது. லெனின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சி புரட்சியில் வெற்றி பெற்றது. புரட்சி வென்றவுடன் வர்த்தகர்கள், முதலாளிகள், குலாக்குகள் (பெரும் நிலப்பிரபுக்கள்) ஆகியோரின் நடவடிக்கைகளின் காரணத்தால் சோவியத் ருஷ்சியாவில் பெரும் பஞ்சம் தோன்றியது. பஞ்சத்தை எதிர்த்து உடனடியாகப் போராட வேண்டிய நிலை லெனினுக்கும் போல்ஷ்விக் கட்சிக்கும் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து 1918 ஆம் ஆண்டு வசந்த காலத்தில், பிரான்ஸ், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய மூன்று நாடுகளின் தலைமையில் பதின்னான்கு நாடுகளின் படைகள் இளம் சோவியத் யூனியனைச் சூழ்ந்து கொண்டு தாக்க ஆரம்பித்தன. இதனால், மீண்டும் ஒரு கடுமையான பஞ்சம் சோவியத் ருஷ்யாவில் தோன்றியது. சோவியத் ருஷ்யா இவ்விரு பஞ்சங்களையும் தீர்ப்பதற்கு என்ன முயற்சிகளை மேற்கொண்டது என்பதை இவ்விரு குறிப்புகளும் விளக்குகின்றன. லெனின் வாழ்க்கைக்குறிப்புக்கள் என்னும் புத்தகத்தில் இருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.*

குலாக்குகள் (பெரும் நிலவுடைமை விவசாயிகள்) நாட்டுப்புற ஏழைமக்களை பண்ணை ஆட்களாக அமர்த்திக் கொண்டு நிலத்தை உழுது பயிரிடச் செய்வார்கள். ஏழையிடம் வசந்த காலம் வரை சாப்பிடப் போதுமான தானியம் இருக்காது. ஏழை, குலாக்கிடம் அரை மணங்கு (ஏறத்தாழ ஒரு புசல்) தானியம் கடனாகக் கேட்பான். இந்தக் கடனுக்காக குலாக்கின் நிலத்தை அவன் உழவேண்டும். கூதிர் காலத்துக்குள் வாங்கிய தானியத்தை அரை மணங்குக்கு பதில் ஒரு மணங்சாக திருப்பிக் கொடுக்க வேண்டும். வேறு வழியின்றி அடிமைப்படுத்தும் இந்த நிபந்தனைகளை ஏழை ஏற்றுக் கொள்வான்; பட்டினிகிடப்பான்; லேசாகக் காற்று அடித்தாலும் தள்ளாடுவான். குலாக்குகளின் கோதுமை நிறைந்த களஞ்சியங்கள் கோட்டைகள் போலப் பூட்டிக் கிடக்கும். அக விலை இன்னும் ஏறும், இன்னும் ஏறும் என எதிர்பார்த்து தானியத்தைப் பதுக்கி வைத்திருப்பார்கள் குலாக்குகள். லாபம் சம்பாதிப்பதற்காக அண்டை வீட்டுக்காரனின் கழுத்தை அறுப்பதற்குக் கூட குலாக் தயங்க மாட்டான்.

நகரங்களிலோ உணவுப்பஞ்சம் மேலும் மேலும் பயங்கரமாகிக் கொண்டு போயிற்று. பஞ்சத்தைத் தீர்க்கவே வழி இல்லை போலத் தோன்றியது. என்ன செய்வது? தொழிலாளர்களுக்கும், அலுவலக ஊழியர்களுக்கும் குழந்தைகளுக்கும் செஞ்சேனை வீரர்களுக்கும் உணவு அளிப்பது எவ்வாறு? தானியங்கள் சேகரிப்பது எவ்வாறு?

கிராமங்களில் தானியங்கள் இருக்கத்தான் செய்தது. அதை விலைக்குக் கொடுக்க குலாக்குகள் விரும்பவில்லை, அவ்வளவுதான். அவர்கள் தானியத்தை தரைக்கடியில் புதைத்துப் பதுக்கி வைத்திருந்தார்கள். அநியாயம் இது. குலாக்குகளின் தானியக் களஞ்சியங்கள் முழுமையாக நிறைந்திருக்கையில் நகரங்களில் மக்கள் பட்டினியால் மடியும்படி விடுவது தகாது. குலாக்குகளின் தானியத்தை விதைத்தவர்கள் பண்ணை உழவர்கள். தானியம் குலாக்குகளுக்கு அல்ல, அவை மக்களுக்கே சொந்தம்.

லெனின் இவ்வாறு தர்க்கித்து தொழிலாளர்களை அழைத்தார்.

தொழிலாளி தோழர்களே ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் உணவுப் பொருட்சேகரிப்பு பட்டாளங்களை நிறுவுங்கள். பல்வேறு கிராமங்களுக்குப் போங்கள். அங்கே ஏழைக் குடியானவர் கமிட்டிகள் இருக்கின்றன. அவை நமக்கு ஆதரவானவை. நடுத்தர விவசாயிகளும் நம்பக்கமே சாய்வார்கள். கிராமங்களில் சோவியத் ஆட்சியை வலுப்படுத்துவது எப்படி? என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீங்கள் அவர்களுக்கு கற்றுத் தாருங்கள். குலாக்குகள் பசித்தவர்களிடம் இருந்து தானியத்தை எங்கு பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று உங்களுக்கு நடுத்தர விவசாயிகள் காட்டுவார்கள் என்று கூறினார்.

கிராமங்களில் உள்ள அதிகப்படி தானியம் எல்லாம் ஏழை குடியானவர்கள் கமிட்டிகளிடமும் தொழிலாளர் பட்டாளங்களிடமும் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற அரசாணையை லெனின் தயாரித்தார். மக்கள் கமிஷாரவை இந்த அரசாணையை உறுதிப்படுத்தியது. இவ்வாறு புரட்சியின் ஆரம்ப ஆண்டுகளில் லெனினும் சோவியத் ஆட்சியும் உடனடியாக செயற்பட்டதன் விளைவாக தொழிலாளி மக்கள் பட்டினியில் இருந்து காப்பாற்றப்பட்டார்கள்.

(1918ம் ஆண்டு வசந்த காலத்தில், பிரிட்டன் பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய மூன்று நேசநாடுகளின் தலைமையிலும் 14 நாடுகள் கூட்டுப்படையமைத்து சோவியத் ருஷ்யாவை முற்றுகையிட்டன. அப்போது நடந்த ஒரு சம்பவம்)

தேசம் முற்றுகைக்குள்ளான கோட்டையாகி விட்டது.

''முற்றுகைக்கு உள்ளான கோட்டையில் வாழ்க்கை இராணுவ முறையில் நடக்க வேண்டும்,'' என்றார் லெனின்.

சர்வஜன உழைப்புக் கடப்பாடு செயற்படுத்தப்பட வேண்டும் என்று அவர் யோசனை தெரிவித்தார். ஆலைகளிலும், தொழிற்சாலைகளிலும் அலுவலகங்களிலும் வயல்களிலும், இருப்புப்பாதைகளிலும் எல்லா சோவியத் மக்களும் வேலை செய்ய வேண்டும் என்பது இந்த யோசனை. செஞ்சேனைக்கு உதவுங்கள், சோவியத் மக்களே!

செஞ்சேனைக்கு ஆயுதங்கள் வேண்டும், ஆகையினால் தொழிலாளத் தோழர்களே, ஆயுதங்கள் உற்பத்தி செய்யுங்கள்! இன்னும் நிறைய உற்பத்தி செய்யுங்கள்!

செஞ்சேனைக்குக் காலணிகளும் உடைகளும் வேண்டும். தொழிலாளத் தோழர்களே! ஆயுதங்கள் உற்பத்தி செய்யுங்கள்! இன்னும் நிறைய உற்பத்தி செய்யுங்கள்!!

தொழிற்சாலைகளால் தேவைக்குப் போதும்படி உடைகள் தைத்துக் கொடுக்கமுடியவில்லை. ஜோடுகள் தைப்பதற்கு தோல் போதவில்லை. சட்டைகள், கோட்டுக்களுக்குப் போதியளவு துணி இல்லை. என்ன செய்வது? மக்களுக்கும் செஞ்சேனைக்கும் போதிய உடைகள் எப்படித் தயாரிப்பது?

மக்களிடமிருந்து கம்பளி உடைகள் திரட்டப்படும் என்று அரசாங்கமும் கட்சியும் அறிவித்தன. ஜனங்கள் தங்களிடம் இருந்த பலவகை கம்பளி உடைகளையும் சால்வைகளையும் காலுறைகளையும் உடை திரட்டும் நிலையங்களில் கொண்டுபோய்க் கொடுத்தார்கள்.

முதலாளித்துவ வாதிகளோ தங்கள் உடைமைகளை வழங்க விரும்பவில்லை.

''பணக்காரர்களிடம் அதிகப்படியாக இருக்கும் கம்பளி உடைகளைப் பறித்துக் கொள்ள வேண்டும். ஆளுக்கு ஒரு மேல்கோட்டு அவர்களுக்கு போதும். உழைப்பாளிகள் கடைசித் துணிவரை தாராளமாக வழங்குகிறார்கள் பணக்காரர்களும் தங்களிடம் உள்ளவற்றைப் பகிர்ந்து கொள்ளட்டும்'' என்று கூறினார் லெனின்.

எல்லாவற்றிலும் கொடிய விபத்தாக விளங்கியது பஞ்சம். வெகுகாலமாகவே நகரங்களில் உணவுப் பொருட்கள் அரைவயிற்றுக்கு காணும்படி, கொஞ்சமாக ரேஷன் சீட்டுக்களின்படியே விநியோகிக்கப்பட்டு வந்தன.

சோவியத் அரசாங்கம் மிகக் கண்டிப்பான புதிய சட்டத்தைப் பிறப்பித்தது. இது உபரிவசூலிப்புச் சட்டம் என அழைக்கப்பட்டது, இதன்படி, குடியானவர்கள் தங்கள் சொந்தத் தேவைகளுக்கு மேல் உபரியாகவுள்ள தானியத்தையும் உணவுப் பண்டங்களையும் அரசாங்கத்திற்கு கொடுத்து விடவேண்டும். குடியானவர்கள் மாவு, குறுநெய், இறைச்சி, வெண்ணெய், உருளைக் கிழங்கு ஆகிய எல்லாவற்றையும் செஞ்சேனைக்காகவும். தொழிலாளர்களுக்காகவும் அலுவலக ஊழியர்களுக்காகவுமாகக் கொடுத்தார்கள். குடியானவர்களுக்கு கஷ்டம் தான், ஆனால் வேறு வழியில்லை.

சோவியத் நாட்டின் உபரிவசூலிப்பும் சர்வஜன கடப்பாடும் நிலவின. மக்கள் அனைவரும் போர் முனைக்காக உழைத்தார்கள். உணவுப் பண்டங்களும் உடைகளும் மிகக்குறைவாய் இருந்தபடியால் ரேஷன் சீட்டுப்படி உணவுப் பண்டங்களும் உத்தரவுச் சீட்டுப்படி உடைகளும் விநியோகிக்கப்பட்டன. அரைச் சீரழிவு நிலையிலிருந்த போக்குவரத்துச் சாதனங்கள் நாட்டின் தற்பாதுகாப்பிற்காக ஆயுதங்களையும் துருப்புகளையும் ஏற்றிச் செல்வதில் ஈடுபட்டிருந்தன. அனுமதிச் சீட்டு இருந்தால்தான் ரயிலில் பயணம் செய்ய முடியும் இந்த அமைப்பைப் போர்கால கம்யூனிஸம் என்று அழைத்தார் லெனின்.

கடினமான ஆண்டுகள் ஆனாலும் வெற்றிக்கு வித்திட்ட ஆண்டுகள் அவை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஒக்டோபர் 10 நினைவு நாள் கட்டுரை

# புதிய பரிமாணம் பெற்ற தமிழ் ஈழப்போராட்டம்

1987, ஒக்டோபர் மாதம் 10ம் திகதி தமிழ் ஈழப் போராட்டத்தின் ஒரு திருப்பு முனையாகும். 1987, ஜூலையில் இந்திய அரசும், சிறீலங்கா அரசும் செய்து கொண்ட ஒப்பந்தமே இத் திருப்புமுனைக்கான காரணமாகும். இரு அரசுகளும் ஒன்றிணைந்து தமிழ் ஈழ போராட்டத்தை அடக்கவும், இந்திய அரசு அதற்கான தலைமைப் பொறுப்பை தானே ஏற்றுக் கொள்ள சம்மதித்ததுமே இவ் ஒப்பந்தத்தின் சாராம்சமாகும். இவ் ஒப்பந்தக் காலம்வரை இந்திய மத்திய அரசு சிறீலங்கா அரசிற்கும், தமிழ் ஈழ மக்களுக்கும் இடையேயான ஒரு மத்தியஸ்தனாகவே தன்னைக்காட்டி வந்தது. அதுவும் தமிழ் ஈழ மக்கள் நலன்மேல் அதிக அக்கறையும், பச்சாத்தாபமும் கொண்ட நண்பனைப் போல் நடித்தும் வந்தது. தமிழ் ஈழ மக்களும் இதை உண்மையென்று நம்பும் அளவிற்கு இந்திய அரசு நடந்து கொண்டது.

சிறீலங்காவின் பேரினவாத அரசும், பேரினவாத அரசுத் தலைவர்களும் இந்தியாவின் உண்மை நிலையைப் புரிந்து கொண்டிருந்தார்கள். ஆனால், சிங்கள மக்களில் மிகப் பெரும்பான்மையோர் இந்திய - சிறீலங்கா ஒப்பந்தம் தமிழ் ஈழத்திற்கு சாதகமானது என்றே கருதினார்கள். இந்திய மத்திய அரசு தமிழ் ஈழத்தை பிரித்துக் கொடுத்துவிடப் போகிறது என்று சந்தேகமுற்றார்கள். இந்திய இராணுவம் சிறீலங்கா இராணுவத்தை அடக்கிமடக்கவே இங்கு வரப்போகின்றது என அஞ்சி நடுங்கினார்கள். தமிழ் ஈழ போராளிகளும், தமிழ் மக்களும் இந்திய ஆக்கிரமிப்பாளர்களின் கைக்கருவிகள் என்ற முடிவுக்கு வந்து அவர்கள் மேல் வெறுப்புற்றார்கள்.

பொதுவான சர்வதேச அபிப்பிராயமோ வேறு விதமானதாக இருந்தது. இலங்கையில் நீண்டகாலமாக நிலவிவந்த இன குழப்பங்களும், முரண்பாடுகளும் ஒரு முடிவுக்கு வரும் நிலைமை தோன்றிவிட்டது என்று நம்பிக்கை கொண்டார்கள். பல சர்வதேச கம்பெனிகள் இலங்கையில் இனி அச்சமின்றி மூலதனமிடலாம் என்ற முடிவுக்கு வந்து சேர்ந்தன. அதற்கான தயாரிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடத் தொடங்கின.

1987, ஒக்டோபர் 10 வரை, இந்திய அரசுக்கும் சிறீலங்கா அரசிற்கும் இடையேயான முரண்பாட்டை கையாள்வதில் இருக்கவேண்டிய திறமைதான், தமிழ் ஈழ போராட்டத்தின் ராஜதந்திரம் என்ற அபிப்பிராயமே பொதுவாக தமிழ் ஈழ, சர்வதேசிய புத்திஜீவிகளின் கருத்தாக இருந்தது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய அனைத்துக் குழுக்களும் இந்த 'ராஜதந்திரத்தை' அடிப்படையாகக் கொண்டே தமது 'கொள்கைகளை' வகுத்து வந்தார்கள். இந்திய அரசுக்கும், சிறீலங்கா அரசிற்கும் இடையேயான முரண்பாடு நிரந்தரமானது என்றும், இம் முரண்பாட்டின் விளைவு தவிர்க்க முடியாமல் இந்திய அரசை தமிழ் ஈழத்துக்கு ஆதரவான நிலையிலேயே வைத்திருக்கும் என்பன போன்ற கருத்துகள் எங்கும் பலிந்திருந்தன.



விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட இந்தியப் படையினரின் டிரக் வண்டி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவை எல்லாவற்றையும் விட நிலவிவந்த மற்றோர் அபிப்பிராயம் என்னவென்றால், தமிழ் ஈழப் போராளிகள் அனைவரும் இந்திய மத்திய அரசின் பராமரிப்பின் கீழேயே உள்ளார்கள் என்பதேயாகும். இதனால், தமிழ் ஈழப் போராட்டமானது இந்தியமத்தியஅரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஓர் இயக்கந்தான் என்ற கருத்தே எங்கும் பரவியிருந்தது. இந்திய அரசும், சிறீலங்கா அரசும் இக் கருத்தில் அதிக நம்பிக்கை கொண்டனவாகவே இருந்தன. உலக அபிப்பிராயமும் பொதுவாக இவ்விதமானதாகவே இருந்தது. இதனால், தமிழ் ஈழப் போராட்டத்தைப்பற்றிஒருவிததாழ்வான அபிப்பிராயமே நிலவிவந்தது.

**ஒக்டோபர் 10ஆம்**திகதி, தமிழ் ஈழ மக்களின் வாழ்வில் ஒரு பெரும் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற நாளாகும். அந்த அன்று தமிழ் ஈழப் போராட்டம் பற்றி நிலவிவந்த மேற்சொன்ன அனைத்து வகை தவறான கருத்துக்களின் தலையிலும் மிகப் பெரும் சம்மட்டி அடி ஒன்று ஓங்கி விழுந்தது. இந்திய இராணுவத்திற்கெதிராக தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் நேரமாக எழுந்தார்கள்: வெற்றி மிகுந்த ஒரு இராணுவ தாக்குதலை மேற்கொண்டார்கள். இந்திய இராணுவத்தை தமிழ் ஈழத்தில் இருந்து துரத்தியடிக்க தாம் தயாராய் உள்ள நிலையை முழு உலகிற்கும் எடுத்துக் காட்டினார்கள். தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும், தமிழ் ஈழ மக்களும் தமது தாய்நாடான தமிழ் ஈழத்தின் சுதந்திரத்துக்காக தமது சொந்தக் கால்களில் நின்று இறுதி வரை போராட உறுதியும், துணிவும், ஆற்றலும் கொண்டவர்கள் என்பதை முழு உலகிற்கும் நிருபித்தார்கள். சிங்கள மக்கள், இந்திய மக்கள் உட்பட உலகின் அனைத்து மக்களும் அதிர்ச்சியுற்றார்கள்; ஆச்சரியம் கொண்டார்கள்; மூக்கின்மேல் விரலை வைத்தார்கள்; உள்ளூர மகிழ்ச்சியுற்றார்கள். தமிழ் ஈழ மக்கள தமது தன்மானமும், தாம் கண்போல் வளர்த்தும், காத்தும் வந்த தமிழ் ஈழ ஒளிப் பிழம்பும் அணையாது பாதுகாக்கப்பட்டதைக்கண்டு ஆகா, ஓகோ என்று ஆனந்தக் கூத்தாடினார்கள். தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

**இவ்விதமாக, ஒக்டோபர் 10 ஆம் திகதிய தாக்குதலின் மூலம் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டமானது புதிய ஒரு பரிமாணத்துள் பிரவேசித்தது.**

## மூளைவிற்கும் ஏகாதிபத்திய தாசர்கள்

*மூன்றாம் உலக நாடுகளில் இருந்து அமெரிக்கா, பிரிட்டன், கனடா ஆகிய நாடுகளுக்குத் தொழில் வல்லுநர்கள் குடியேறுவதன் காரணமாக, 1961 - 1972 இல் 51 பில்லியன் அமெரிக்க டாலர் (ரூ61,200 கோடி) மதிப்புள்ள 'மனித மூலதனத்தை' மூன்றாம் உலக நாடுகள் இழந்துள்ளன என ஒரு உங்க்டாட் மதிப்பீடு கூறுகின்றது. இது இதே காலகட்டத்தில் இம் மூன்று நாடுகளும் மூன்றாம் உலகிற்கு வளர்ச்சி உதவியாகக் கொடுத்த 46 பில்லியன் அமெரிக்க டாலர்களை (ரூபா 55,200 கோடி) விட அதிகமாகும். சுக போகத்திற்காக மூளை விற்பவர்களால் தமிழ் ஈழமும் மனித மூலதனத்தை இழந்து வருகின்றது. இது இனியும் அனுமதிக்கப்பட வேண்டுமா?*

தெற்காசிய பிராந்தியத்தில் இந்திய மத்திய அரசுதான் வல்லமைமிக்கதொரு மேலாதிக்கவாத, இனவாத அரசாகும். தெற்காசிய பிராந்தியத்தின் அனைத்து ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களினதும் அனைத்து வகை தேசிய எழுச்சிகளையும் அடக்கும் அதிகாரத்தைத் தனதாக்கிக் கொண்டுள்ள வல்லரசாகும். இந்தியாவை மீறி தெற்காசிய பிராந்தியத்துள் எந்த ஒரு வல்லாதிக்கமும் நுழைய விரும்பாத தற்போதைய நிலைமை இந்தியாவிற்கு மிக வாய்ப்பாக அமைந்துள்ளது. ஒக்டோபர் 10 ஆம் திகதிய நிகழ்வுடன் தமிழ் ஈழ போராட்டமானது சிறீலங்கா அரசுக்கெதிரான ஒரு போராட்டம் மாத்திரமே என்ற பரப்பளவைத் தாண்டி, அது தெற்காசிய மேலாதிக்கத்திற்கும் எதிரானது என்ற பரந்த ஒரு பரப்பளவிற்குள் இட்டுச் செல்லப்பட்டது. இதன் மூலம் எமது போராட்டமானது தெற்காசிய பிராந்திய மக்களினதும் இந்திய மேலாதிக்கத்திற்கு உட்பட்ட தேசங்களினதும், தெற்காசிய பிராந்தியத்தில், குறிப்பாக இந்திய உபகண்டத்தில் உள்ள ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களினதும் நட்பணியாகவும், நம்பிக்கை ஒளியாகவும் பரிணாமம் பெற்றது. இதுதான் தமிழ் ஈழப் போராட்டம் அடைந்த மற்றைய புதிய பரிணாமமாகும்.

**ஒக்டோபர் 10ஐ என்றென்றும் நினைவு கூர்வோம்!**

**அனைத்து வழியிலும் எமது சொந்தக் காலில் ஊன்றி நிற்கும் போக்கை மேலும் வளர்த்தெடுப்போம்!**


**என்ன விலை கொடுத்தும் எமது தாயகத்தை மீட்டெடுப்போம்!**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அண்ணையின் கடிதம்



தமிழீழம்

..............90

பாசமுள்ள உடன் பிறப்பே!

கனிவான எனது நல்வாழ்த்துக்களை ஏற்றுக்கொள். நீ கிளப்பிய பல பிரச்சனை களையும் கவனத்திற் கொண்டேன். ஒவ்வொரு பிரச்சனைகளாக பதில் கூற அனுமதி வழங்கு. எவ்வளவு பசியாக இருந்தாலும், என்னதான் சுவையான உணவாக இருந்தாலும் சோற்றைக்- கவளம் கவளமாகத்தானே உண்ணமுடியும்.

எங்கோ ஓர் கருத்தரங்கில் நீ பேசும் பொழுது, மக்கள் விழாக்களிலும் வைபவங் களிலும் ஈடுபட்டுவருவதைக் கண்டித்தாய் என்பதை மிகப் பெருமையுடன் எழுதியிருந்தாய் உனது பெருமையை என்னால் மெச்ச முடியாமைக்கு வருந்துகின்றேன். அதேபோல் அன் றொரு நாள் மாலைப்பொழுதில் உனது பிரதேசத்தில் உள்ள கள்ளுத்தவறணையின் முன் னால் கள் அருந்தி இன்புற்றிருந்த 20 பேரை வலுக்கட்டாயமாக பதுங்கு குழி வெட்ட அழைத்துச் சென்ற உன் வீரச் செயல்பற்றியும் பெருமிதப்பட்டிருந்தாய். உனதும், எனதும் இன்னோர் சகோதரம் என்ன செய்துள்ளான் தெரியுமா? தோளுக்குத் தோள் கைபோட்டபடி ஜாலியாக வீதி உலாவந்து கொண்டிருந்த பத்து இளைஞர்களையும் அப்படியே கட்டாகத் தூக்கிக் கொண்டுபோய் இரண்டு நாள் பதுங்குகுழி வெட்டவைத்துள்ளானாம். அவனும் இச்சம்பவத்தை என்னிடம் மிகப் பெருமையாகச் சொல்லிக் கொண்டான்.

யுத்த அழிவுகளும், யுத்தத்திற்கான தியாகங்களும் நடந்துகொண்டிருக்கும் வேளை யில், அவற்றைக் கணக்கெடுக்காது, அவற்றில் இருந்து ஒதுங்கி நின்று கேளிக்கை வைபவங் களும், விழாக்களும் நடத்துவது தவறு என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. அதேபோல், கள் அருந்தலும் தவறானதுதான். பணம் விரயமாகின்றது, அவசியமற்ற சண்டை சச்சரவு களைத் தோற்றுவிக்கின்றது. ஆகவே இது கண்டிக்கப்பட வேண்டியதுதான். இளைஞர்களி லும், யுவதிகளிலும் கணிசமானோர் போராட்டத்தில் இருந்து அந்நியமாகியிருப்பது, கவலைக்குரிய ஒரு விடயம்தான். எங்கள் தந்தையர் நாடு இவ்விதமானதோர் இக்கட்டுக்கு முகங்கொடுத்துள்ள இந்த வேளையில், எதுவித பொறுப்புணர்வும் இன்றி ஜாலியாக அரட்டை அடித்துத் திரியும் இவ் இளம் சந்ததியினர் சகிக்கவொண்ணா ஒட்டுண்ணிகள் தான். இதில் எதுவித ஆட்சேபணையும் இல்லை.

அப்படியானால், இவ்விதமானவர்களுக்கெதிரான நடவடிக்கைகளையிட்டு பெருமைப் படுவதில் என்ன தவறு என்று வினாவலாமல்லவா? இத்தவறு செய்பவர்கள் மக்களில் ஒரு பகுதியினர். அவர்கள் மக்கள் விரோதிகள் அல்லர். இப்பகுதியினர் தமது சமூக கடமையை இன்னமும் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் மனதில் இன்னமும் விடுதலை வேட்கைத் தீ கொழுந்து விட்டு எரியவில்லை. அடிமைப்படுத்தலுக்கு எதிராக முணுமுணுக்கவும், புறு புறுக்கவும் மட்டுந்தான் தெரியுமே தவிர அதற்கெதிராக போரிடும் துணிவை அவர்கள் இன்னமும் பெறவில்லை. தம்மைத்தாமே இன்னமும் புரிந்து கொள்ளாத இப்பகுதியின ரையிட்டு நாம் எடுக்கவேண்டிய நடவடிக்கை என்ன அவர்களுக்கும் எமக்கும் இடை யேயான முரண்பாடு எத்தன்மையது? இவைதான் இங்குள்ள கேள்வி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாம் அவர்கள் மேல் எடுக்கும் எந்த நடவடிக்கையும் அவர்களை எம்முடன் இணைத்துக் கொள்வதை நோக்கமாகக் கொண்டது. அவர்களைப் பகைத்துக் கொள்வதை நோக்கமாகக் கொண்டதல்ல. மக்களின் ஒரு பகுதியினர் மேல் சமூக விரோதிகள் என்ற முத்திரை குத்தி நாமாகவே அவர்களை எதிரிகளின் முகாமை நோக்கித் தள்ளிவிடக் கூடாது. எதிரிகளைக் கூட்டிக் கொள்வதுவும், எதிரிகளுக்கு சாதகமான சூழலை வளர்த்து விடுவதுவும் பெருமைப்படக் கூடியனவா?

சமூகத்தில் மனிதர்களிடையே நிலவும் முரண்பாட்டில் இருவகையுண்டு. ஒன்று பகை முரண்பாடு, மற்றையது சினேக முரண்பாடு. ஒன்று மற்றையதை அழிக்கும் தன்மை கொண்டது. ஒன்றின் அழிவில் தான் மற்றதன் வாழ்வு தங்கியிருப்பதும் பகை முரண்பாட்டின் குணங்கள். சிறிலங்கா அரசிற்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான முரண்பாடு பகைமுரண்பாடு. சிறிலங்கா அரசுடன் சேர்ந்து செயற்படுவோருக்கும் எமக்கும் இடையேயான முரண்பாடு பகைமுரண்பாடு. காட்டிக் கொடுப்போர்க்கும் எமக்கும் இடையேயானதும், தமிழீழ பொருளாதரத்தை குலைக்க முற்படுபவர்களுக்கும் எமக்கும் இடையேயானதுமான முரண்பாடு கூட பகைமுரண்பாடுதான். இங்கு ஒன்றின் அழிவில்தான் மற்றதன் வாழ்வு தங்கியுள்ளது. ஏதோ ஒன்று அழிக்கப்படும்போது அல்லது செயலிழக்கச் செய்வதன் மூலம் தான் இம்முரண்பாடு தீர்க்கப்படும். பகைமுரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு வேறு மாற்றுவழி எதுவுமே இல்லை.

சினேகமுரண்பாடுகள் என்பவை எவை? முரண்டுபடும் இரு அம்சங்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்து கொள்வதன் மூலம் மாத்திரம் தீர்க்கப்படும் முரண்பாடுகள் சிநேகமுரண்பாடுகளாகும். சிற்றூரவைக்கும் பிரதேசப் பொறுப்பாளருக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டால் அவை பகைமுரண்பாடுகளா? இல்லை. அவை சினேக முரண்பாடுகள். மாவட்ட அரசியற் பொறுப்பாளருக்கும் பிரதேச அரசியற் பொறுப்பாளருக்கும் இடையே ஏற்படும் முரண்பாடுகளும் சினேக முரன்பாடுகளேயாகும். இவற்றை எல்லாம் பகை முரண்பாடுகளாகக் கருதினால் என்னவாகும்? இயக்கமே பற்பல துண்டுகளாக உடைந்து சிதறித் தானே போய்விடும்.

சினேக முரண்பாடுள்ள பகுதிகளைக் கையாள்வதில் எமது நோக்கம் அவ்விரு பகுதிகளிடையே ஐக்கியத்தை உருவாக்குதலேயாகும். முரண்பாடுள்ள அவ்விரு பகுதிகளிடையே ஐக்கியத்தை ஏற்படுத்தத் தடையாக இருக்கும் அம்சங்களை நீக்குவதே எமது நோக்கமாகும்.

இவ்விதம் நோக்கும் போது எமக்கும் மக்களுக்குமிடையேயான முரண்பாடு எது என்று நீ எண்ணுகின்றாய். மக்களை அழிப்பதா எமது நோக்கம்? அல்லது எம்மை அழிக்கவா மக்கள் விரும்புகிறார்கள்? எமக்கும் மக்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டால் அது பகைமை முரண்பாடா? நிச்சயமாக அப்படி இல்லை; இருக்கவும் முடியாது. அந்நிய சக்திகளுக்கு எமது மண்ணையும், மக்களையும் காட்டிக் கொடுத்து வந்த துரோக இயக்கங்களுக்கும் தமிழீழ மக்களுக்கும் இடையே இருந்த முரண்பாடு பகைமைமுரண்பாடுதான். தற்போதுங்கூட அது அப்படித்தான். ஆகையினால்தான் அவர்கள் தமிழீழ மக்களை ஆயுதத்தால் அடக்கியும், மிரட்டியும் வைத்திருந்தார்கள்.

ஆனால், விடுதலைப்புலிகளுக்கும் தமிழீழ மக்களுக்கும் இடையே நிலவும் முரண்பாடு சிநேக முரண்பாடேயாகும். நாம் ஒரு மக்கள் புரட்சியை விரும்புகிறோம். அதற்காக மக்களைத் தயார்படுத்துவது எவ்விதம் என்பதுவே எம்முன்னால் உள்ள பிரச்சனை. மக்கள் தம் மத்தியில் நிலவும் பலவீனங்கள் இதற்கு தடையாக இருப்பதை நாம் உணர்கிறோம். மக்களின் சொந்த பலவீனமே மக்களைப் பின்தள்ளி வைக்கின்றது என்பதை நீயும் நானும் எம்மில் அனைவரும் காணுகின்றோம்; இதைக் கண்டு மனம் வெதும்புகின்றோம். இந்த நிலைகெட்ட மாந்தரைக் கண்டு நெஞ்சு பொறுக்காமல் நீ இச்சிறு வயதிலேயே அடிக்கடி இரத்தக் கொதிப்புக்குள்ளாவதை நான் நன்கு உணர்வேன். உன் உணர்வுகளை நான் மதிக்கிறேன். மக்களின் பேடித்தனங்கண்டு வெந்து புண்ணாகும் உன் உள்ளத்து வடுக்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மென்மலர் இதழ் கொண்டு வருடிக் கொடுக்க நான் தயாராய் உள்ளேன். உன் வேதனை நியாயமானதுதான்; அதை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

ஆனால், என் ஆருயிர் உடன்பிறப்பே, இதற்காக நீ என்ன செய்யப்போகிறாய்? மக்களைத் தண்டிக்கப்போகிறாயா? மேடைகளில் ஏறி மக்களைத் திட்டித் தொலைக்கப் போகிறாயா? ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்று சொல்லுவார்களே! அதை என்றும் மறவாதே. மக்களின் பலவீனமான குணாம்சங்களையும், பேடித்தன்மையையும் களைந்தெறிவதில் பொறுமை காட்டு; அதற்கான வேலைத்திட்டங்களை வகுத்துக்கொள். உனது ஒவ்வொரு நடவடிக்கையும் மக்களுக்கும் உனக்கும் இடையில் ஒரு அந்நியோன்யத்தன்மையை ஏற்படுத்துவதாகவும், மக்களைப் புரட்சிக்குத் தயார்படுத்துவதாகவும் அமைய வேண்டும். மக்கள் உன்னைக் கண்டு பயந்து ஒதுங்கக் கூடாது; அஞ்சி நடுங்கக் கூடாது; உனக்கு முன்னால் துதிபாடி உன்னை மகிழ்விக்க முற்படக் கூடாது. இவ்விதம் எல்லாம் மக்கள் நடப்பார்களேயானால் நீ மக்களை மேலும் பின் தள்ளிவிட்டாய் என்றே பொருள்படும். நீ எதை விரும்புகிறாயோ அதற்கு எதிர்மாறான விளைவு ஏற்பட்டு விடும் என்பது புரியவில்லையா?

*மக்களைப் படிப்படியாக அரசியல் மயப்படுத்து!*
*மக்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைகளில் கவனம் செலுத்து!*
*மக்களின் தவறுகளை விமர்சனம் செய், ஆனால்*
*அவர்களின் மனம் புண்படும்படி நடந்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்!*

பொறுமை, விட்டுக்கொடுப்பு, போதனை, அரவணைப்பு, கண்டிப்பு இவைதான் சிநேக முரண்பாட்டைக் கையாள்வதற்கான வழிவகைகள்.

தனிமைப்படுத்தல், அவமானப்படுத்தல், தூக்கியெறிதல், அடக்கி ஒடுக்கல் அவசியமானால் அழித்தொழித்தல், இவைதான் பகைமை முரண்பாட்டை கையாள்வதற்கான வழிவகைகள்.

மக்களுக்கும் உனக்கும் இடையேயான முரண்பாட்டைக் கையாள்வதில் நீ எந்த வழிவகையைப் பின்பற்றப் போகிறாய்? சிந்தித்துச் செயலாற்றுவாய் என எதிர்பார்க்கின்றேன்.

நீண்ட என் மடலைப் பொறுமையுடன் படிப்பதற்கு நன்றிகள். தயவு செய்து மீளவும் ஒரு தடவை படித்துப்பார். இது தொடர்பான உன் அபிப்பிராயத்தைத் தயங்காமல் எழுது. அடுத்த கடிதத்தில் இதே விடயத்தை வேறோர் கோணத்தில் இருந்து நோக்குவோம்.

விடைபெறுகிறேன், என் உடன் பிறப்பே.

பாசமுள்ள,
அண்ணன்
அருண்

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுய - சார்பு தேசிய பொருளாதாரம் தேசிய அபிவிருத்தியா? தேசிய தற்கொலையா?

*தமிழ் ஈழ தேசிய பொருளாதாரம் என்பது என்ன?*

தமிழ் ஈழ மக்கள் தமது பொருளியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மேற்கொள்ளும் உற்பத்தி நடவடிக்கைகள், விநியோக முறைகள், பயன்படுத்தும் தொழில் நுட்பத்தினதும் உற்பத்திக் கருவிகளினதும் தன்மைகள், கிடைக்கப் பெறும் மூலவளங்கள், உற்பத்தி செய்யப்பட்ட சமூக செல்வங்கள் சமூகத்தின் அங்கத்தவர்களிடையில் பகிர்ந்தளிக்கப்படும் முறை, வெளியுலகத்துடன் உள்ள சந்தைத் தொடர்பின் தன்மை ஆகியவற்றின் ஒட்டு மொத்த தொகுப்பே பொருளாதாரமாகும். இப்பொருளாதாரமானது ஒரு குறிப்பிட்ட பூகோளப் பரப்பினுள் தமக்குள் நெருக்கமாகப் பிணைந்து, அப் பூகோளப்பரப்பிற்கென்று தனியானதும் பொதுவானதுமான ஒரு சந்தையையும், பொருளாதார கொள்கைகளையும் கொண்டு செயற்படும் போதே அது ஒரு தேசிய பொருளாதாரமாக மாற்றமுறும்.

இலங்கையின் ஒவ்வொரு மாகாணத்திற்கும் என தனித்தனியான பொருளாதார வடிவங்கள், தனித் தனிக் குணாம்சங்கள் உண்டு. ஆனாலும் அவை ஒவ்வொன்றும் தனித்தனியான தேசிய பொருளாதாரங்களல்ல. சிறிலங்கா தேசிய பொருளாதாரத்தின் தனித்தனி அலகுகள் என்று அவற்றைச் சொல்லலாம். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கூட இந்த நிலையிலேயே உள்ளன. தமிழ் ஈழ தேசிய பொருளாதாரம் என்ற ஒன்று இன்னமும் திரட்சி பெறவில்லை. வடக்கு கிழக்கிற்கு என்று தனியானதும், பொதுவானதுமான ஒரு சந்தை அமையவேண்டும். அதாவது, தமிழ் ஈழத்திற்கென்று தனியான நகரம் அமைய வேண்டும். தமிழ் ஈழத்திற்கென்று தனியான ஒரு பொருளாதார கொள்கையும், அதற்கான மத்தியத்துவமும் உருவாக வேண்டும். அதாவது, கைத்தொழில் நகரமும், துறைமுக நகரமும், நிதித்துறை நகரமும் அமைய வேண்டும். உலகச் சந்தையுடன் தமிழ் ஈழம் தனித்துவமாக வர்த்தக, ஏனைய பொருளாதார தொடர்புகள் கொள்ளும் நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். இவ் இலக்குகள் எய்தப்படும் பட்சத்திலேயே தமிழ் ஈழ தேசிய பொருளாதாரம் என்ற ஒன்றின் அமைவு முழுமை பெறும்.

இத் தமிழ் ஈழ தேசிய பொருளாதாரமானது நிலைத்து நிற்பதற்கு ஒரு மண் வேண்டும். இம் மண்ணில் செழித்து வளரும் தேசிய பொருளாதாரத்தைப் பாதுகாக்கவும், அதை வளர்த்தெடுக்கவும் அந்த மண்ணின் மைந்தர்களின் கைகளில் அம்மண்ணை ஆளும் அரசியல் அதிகாரம் வந்தாக வேண்டும். இதன் பின்பே தேசிய பொருளாதாரம் பற்றி ஒரு முழுமை தழுவிய முறையில் எம்மால் திட்டமிட்டுச் செயற்பட முடியும். ஆனால், மண் மீட்கப்பட்டு அங்கு எமது அரசியல் அதிகாரம் நிலைநிறுத்தப்படும்வரை தமிழ் ஈழப்போராட்டம் பற்றி நாம் எதுவித நடவடிக்கையும் இன்றி வாளாதிருக்க முடியாது.

இன்று தமிழ் ஈழப் பொருளாதாரமானது சிறிலங்கா பொருளாதாரத்தின் ஒரு அங்கமாய் இருப்பதன் காரணத்தால், அது தனித்துவத்தை இழந்து முற்றிலும் சார்புத் தன்மை பெற்றதாகவே உள்ளது. சில உதாரணங்களைப் பார்ப்போம்; வடக்கு மாகாணத்தை தனியாக நோக்கினால், கிளிநொச்சி மாவட்ட, யாழ்-மாவட்ட நெல் தவிர்ந்த ஏனைய மாவட்ட நெல் கிட்டத்தட்ட முழுமையும் தென் இலங்கைச் சந்தைக்கே செல்கின்றன. வவுனியா மாவட்டத்தில் உள்ள நெல் குத்தும் ஆலைகள் வட மத்திய மாகாணத்தின் நெல்லைக் குத்துவதற்கே பயன்படுத்தப்படுகின்றன. அங்கிருந்து நெல் வரவில்லையானால் அவ்வாலைகள் செயற்படமாட்டாது. யாழ்ப்பாணத்தில் மிக வளமான காணிகளில் பயிர்செய்யப்பட்டு, அதிகளவு நீரைப் பயன்

www.tamilarangam.net

படுத்தும் கொடிமுந்திரி (திராட்சை) வடமாகாண சந்தைகளை எட்டிப்பார்க்காது நேரடியாக கொழும்பு சென்று விடுகின்றது. உருளைக்கிழங்கு, பீட்றூட் கிழங்கு போன்றவையும் இவ்விதமேயாகும். இவையும் உள்ளூர் சந்தையை விட கொழும்புச் சந்தையையே கூடுதலாக நம்பியுள்ளன. வெங்காயம், மிளகாய் போன்றவை உள்ளூர் சந்தையில் பெருமளவு நுகரப்படுகின்றது. ஆனாலும், இவற்றின் உற்பத்தி வடமாகாண சந்தைக்கு தேவையானதையும் விட கூடுதலாகவே உள்ளன. கொழும்புச் சந்தைக்கு அனுப்பப்படும் மிளகாய், வெங்காயத்தின் அளவு வடமாகாண சந்தையில் விலைப்படுவதையும் விட கூடுதலாகவே உள்ளது. புகையிலை உற்பத்தியும் இதேபோன்றதுதான். வாழை உற்பத்தியும் கூட கொழும்புச் சந்தையிலேயே தங்கியுள்ளது. சுருங்கச் சொன்னால் வடமாகாணத்தின் லாபந்தரும் பணப்பயிர்கள் அனைத்தும் கொழும்புச் சந்தையில் இருந்தே தமது உயிர்க்காற்றைப் பெற்றுக் கொள்கின்றன. மீன்பிடித் துறையைப் பொறுத்தவரையிலும் இந்நிலைமையையே காணக் கூடியதாய் உள்ளது. யாழ்குடா நாட்டவர்களும், வடமாகாணத்தின் ஏனைய கரையோரப்பகுதி மக்களும் மீன் நுகர்வில் குறிப்பிடக் கூடியளவு பங்கு வகிக்கிறார்கள். உள்ளூர் நுகர்வாளர்களால் மீன்பிடித் துறை ஊக்குப்படுத்தப்படுகின்றது உண்மையேயாகும். ஆனாலும் கூட, வடமாகாணக் கடல் மீனும், கடல் மீன் கருவாடும் கொழும்புச் சந்தையில் கணிசமானளவு இடத்தை நிரப்புகின்றன. இறால், கணவாய், கருவாடு போன்றவற்றின் வடமாகாண விலையைத் தீர்மானிப்பது கொழும்புச்சந்தையாகவேயுள்ளது.

எமது விவசாய, மீன்பிடி விளைபொருட்கள் தமது விநியோகத்திற்காக கொழும்புச் சந்தையைச் சார்ந்திருக்கும் இந்நிலைமை, சார்பு பொருளாதாரத்தின் ஒரு குணாம்சமாகும். எமது நாடு சிறிலங்காவின் 'தேசிய சந்தையை' சார்ந்தே அமைந்துள்ளது. இவ்வித அமைவையே எமது மக்களில் பலர் பொருளாதார அபிவிருத்தி என்று கருதுகிறார்கள். கொழும்புடனான தொடர்பு அறுந்து விட்டால் எமது பொருளாதார அபிவிருத்தி தடைப்பட்டுவிடும் என்று அஞ்சுகிறார்கள். கொழும்புச் சந்தைக்கு எமது விளைபொருட்களை அனுப்புவதும், அங்கிருந்து உள்ளீடுகளையும், ஏனைய அத்தியாவசிய, ஆடம்பரப் பொருட்களையும் வாங்குவதையும் தான் பொருளாதார அபிவிருத்தி என்று இவர்கள் கருதுகிறார்கள்.

எமது தேசிய சந்தைத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையில் எமது மக்களின் உழைப்பையும், எமது மூலவளங்களையும் பயன்படுத்துவதே உண்மையான பொருளாதார அபிவிருத்தியாகும். இது சுய சார்பு தேசிய பொருளாதாரத்தின் குணாம்சங்களில் ஒன்றாகும்.

இவ்விதம் இல்லாது உள்ளீடுகளின் கொள்வனவுக்கும் விளை பொருட்களின் சந்தைப்படுத்தலுக்கும் கொழும்புச் சந்தையையே சார்ந்திருப்பது தேசிய தற்கொலையாகவே முடியும்.

## சிங்களச் சுரண்டலினால் நீர்வளத்துக்கும் ஆபத்து

சிமெந்து உற்பத்திக்கென காங்கேசன்துறை சிமெந்து ஆலையின் சுற்றாடல் பகுதியிலிருந்து ஏறத்தாழ 25 அடி ஆழம்வரை சுண்ணாம்புக்கல் வெட்டி எடுக்கப்படுகிறது. கடற்கரை ஓரமாக உள்ள இப்பகுதியிலிருந்து இப்படி சுண்ணாம்பு வெட்டி எடுக்கப்படுவதனால் நிலத்திலுள்ள நன்னீர் பாறை வெடிப்புக்களினூடாக கடலை நோக்கி நீரூற்றுக்களாகப் பெருமளவில் வெளியேறும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த இடங்களில் அதிக அளவு ஆழத்தில் சுண்ணாம்புக் கற்பாறைகள் வெடிவைத்துத் தகர்க்கப்படும்போது இவ் வெடிப்புக்கள் அதிர்ச்சியினால் மேலும் விரிவடைந்து கடலை நோக்கி ஓடுகின்ற நிலநீர் ஓட்டத்தை மேலும் அதிகரிக்கச் செய்கின்றன. இதனால் யாழ் குடாநாட்டில் நிலநீர் கொள்ளளவு வெகு விரைவாகக் குறைந்து வரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் நந்நீரையும், பயிர்ச்செய்கைக்கு ஏற்ற வளமான செம்மண்ணையும் கொண்டிருந்த இந்தப்பகுதியில் தற்போது நிலநீர் ஆவியாதலாலும், அதனால் நீரில் உள்ள உப்புக்கள் ஒருங்கு சேர்ந்து அந்த இடங்களிலேயே படிந்து வருவதனாலும் நிலநீர் சவர்த்தன்மையுடையதாக மாறிவருகிறது.

இங்கு அகழ்ந்து எடுக்கப்படும் சுண்ணாம்புக் கற்களில் பெருமளவு சிங்களப் பகுதியிலுள்ள காலிக்கு சிமெந்து உற்பத்திக்காக எடுத்துச் செல்லப்பட்டுவந்தது. சிங்களச் சுரண்டலினால் தமிழர் நீர்வளத்துக்கும் பேராபத்து ஏற்பட்டுள்ளது.

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு

தமிழீழ விடுதலைப்புலிகளின் வீர வரலாறுதான் தமிழீழ புரட்சிகர விடுதலைப் போராட்டத்தின் வரலாறாகும். ஏனெனில், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழீழ மண்ணில் ஆயுதப் போராட்டத்துக்கான உறுதியான அடித்தளத்தை அமைத்து நீண்டகாலமாக தொடர்ச்சியான, நிலையான ஆயுதப் போராட்டத்தினை முன்னெடுத்திருக்கின்றது. விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டமானது பதினெட்டு ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றைக் கொண்டது. உருக்குப்போன்ற உறுதியுடனும் உன்னத தியாக உணர்வுடனும் வீர காவியங்கள் படைத்த வீர மறவர்களின் வரலாறு இது. புரட்சிகர வரலாற்றுச் சூழ்நிலையில் பிறப்பெடுத்த விடுதலைப் புலிகள் இயக்கம் தலைமறைவு கெரில்லா அணியாகத் தோன்றி இன்று பரந்துபட்ட மக்களின் அபிமானத்துக்கும் ஆதரவுக்குமுரிய தேசிய விடுதலை இயக்கமாக, விடுதலை இராணுவமாக பரிணாமம் பெற்றிருக்கின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் வீம்புக்காகவோ பொழுது போக்குக்காகவோ ஆயுதமேந்தியவர்களல்லர். 30 ஆண்டு காலமாக இலங்கைத் தமிழர்கள் இழந்து வந்த உரிமைகளை மீட்க என உண்ணாநோன்புகள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் கறுப்புக்கொடி இயக்கங்கள், கடை அடைப்புக்கள், மறியல்கள் என அமைதி வழிகளில் எல்லாம் போராடித் தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்குத் தீர்வுகாண விழைந்த போதும், சிங்கள ஆட்சியாளர்கள் அந்த அமைதி வழிப் போராட்டங்களை ஆயுதப் படைகளின் இரும்புக் கரங்களினால் வன்முறையில் நசுக்கியதுடன், தமிழர்கள் அனுபவித்து வந்த மிச்ச சொச்ச உரிமைகளையும் பறித்தனர். ஆட்சியாளரின் இந்த விலங்குத்தனமான ஒடுக்குமுறை எல்லை மீறி உச்சக்கட்டத்தை அடைந்ததாலும், தன்னாட்சி பெற்றால் மட்டுமே இலங்கையில் தமிழர்கள் வாழமுடியும் என்ற நிலை தோன்றியபின், தன்னாட்சி பெற ஆயுதப்போர் ஒன்றே வழி என்ற நிலை ஏற்பட்டதால்தான் விடுதலைப்புலிகள் ஆயுதமேந்திப் புரட்சிகரமான விடுதலைப் போரில் குதித்தனர். விடுதலைப் புலிகளின் வரலாற்றைச் சித்தரிக்கும்போது தமிழீழத்தின் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் பற்றிய வரலாற்றுப் பின்னணியைத் தெரிந்துகொள்வது அவசியமாகும்.

## வரலாற்றுப் பின்னணி.

1948ல் பிரிட்டிசார் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்குவதாகக் கூறி தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்காது நாட்டின் ஆட்சி அதிகாரத்தை ஒரு தலைப்பட்சமாக ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் சிங்களப் பெரும்பான்மையின் கைகளில் ஒப்படைத்து விட்டுச் சென்றனர். அதிகாரத்தைக் கையேற்ற சிங்கள ஆட்சியாளர்கள் இலங்கையை ஒரு தனிச்சிங்கள பௌத்த நாடாக்க வேண்டும் என்ற வெறியுடன், தமிழினத்தை எப்படி எல்லாம் அழிக்க முடியுமோ அப்படியெல்லாம் அழிப்பதற்கு மிகப் பெரிய அளவில் திட்டம் தீட்டிச் செயற்பட்டு வந்தனர். ஒவ்வொரு தேர்தலின் பின்பும் ஆட்சியாளர்கள் மாறினர். அவர்களது நடைமுறைக் கொள்கைகள் மாறிற்று. ஆனால், தமிழினத்தை அழித்தொழிப்பதற்கான முன்னைய அரசால் கொண்டுவரப்பட்ட இன அழிப்புத் திட்டத்தை மட்டும் மாறி மாறி வந்த ஒவ்வொரு அரசும் மாற்றாமல் அப்படியே தொடர்ந்து அமுல் படுத்தி வந்தன.

## இனக்கொலைத்திட்டம் வளர்ந்த வரலாறு.

இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் இந்திய மக்களின் சுதந்திர எழுச்சியைச் சிதைப்பதற்குச் சதி செய்து வங்காளப் பிரிவினையை வெள்ளையர் கொண்டு வந்தது போல, பதவிக்கு வந்தவுடனேயே சிங்கள ஆட்சியாளர்கள் தாம் அமுல் நடத்தவிருக்கும் தமிழின அழிப்புத் திட்டத்திற்கெதிராக இலங்கைத் தமிழர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கிளர்ந்தெழாவண்ணம், மலையகத் தமிழர்களை பூர்வீகத் தமிழர்களி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


லிருந்து வேறுபடுத்தி இலங்கையிலிருந்து வெளியேற்றத் திட்டம் தீட்டி, அவர்களின் குடியுரிமை, வாக்குரிமைகளைப் பறித்தனர். அதை எதிர்த்துத் தமிழ் மக்கள் அமைதி வழியாகப் போராடி பாராளுமன்றத்தின் மூலமும், பொதுக் கூட்டங்கள் வாயிலாகவும் குரல் கொடுத்த போதும், சிங்கள அரசு பணியாது. தனது இனக் கோலைத் திட்டத்தின் முதலாவது கட்டத்தை நிறைவேற்றியது.

## நில ஆக்கிரமிப்பும் சிங்களக் குடியேற்றமும்.

அடுத்த கட்டமாக சிங்கள ஆட்சியாளர்கள் பூர்வீகமாக இலங்கையில் வாழ்ந்து வந்த தமிழ் விவசாயிகளின் வளங்கொழிக்கும் நிலங்களை ஆக்கிரமித்து அவற்றில் சிங்களவர்களைக் குடியேற்றினர். 30 ஆண்டுகளுக்குள் இலங்கைத் தமிழர்கள் - தமது சொந்த மண்ணைச் சிங்களக் குடியேற்றங்களிலிருந்தும் மீட்க அமைதி வழிகளில் போராடியபோதும் - அம்பாறை என்ற தமிழ் மாவட்டத்தை முழுமையாகவும் வவுனியா, திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தீவு என்னும் 5 (ஐந்து) மாவட்டங்களில் அரைவாசிப் பகுதிகளையுமாகத் தம் பாரம்பரிய மண்ணில் 3/8 பகுதியை இழந்து விட்டார்கள்.

சிங்களக் குடியேற்றத்தினால் இலங்கையில் ஒரு தமிழ் மாவட்டமே சிங்கள மயமாக்கப் பட்டு, அம்பாறை என்னும் பெயர் திகாமடுல்ல என்று மாற்றப்பட்டது. தமிழ் மக்களின் எதிர்ப்புகள், கண்டனங்கள் உதாசீனப்படுத்தப்பட்டு, வரலாற்றுக் காலந்தொட்டு தமிழ் மக்கள் தொடர்ந்து வாழ்ந்து வந்த செந்தமிழ் ஊர்ப் பெயர்கள் எல்லாம் சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டன. பட்டிப்பளை - கல்லோயாவாகியது.. குமரன்கடவை - கோமரங்கடவ ஆகியது. முதலிக்குளம் - மொரவாவ ஆகியது. மகாவிளாங்குளம் - மகாதிவுல்வாவ ஆகியது. புடவைக்கட்டு சாகரபுர ஆகியது. புல்மோட்டை - கணிகபுர ஆகியது.

ஒரு தேசிய இனத்தை -அதன் - மொழியை கலை, கலாசாரத்தை அழிக்க வேண்டுமானால், அந்த இனத்துக்கென ஒரு பிரதேசத்தை இல்லாதாக்கிட வேண்டும் என்பதே, ஏகாதிபத்திய வாதிகளின் சூழ்ச்சிச் சூத்திரமாகும். சிங்கள ஏகாதிபத்தியவாதிகள் இதனை மிகச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கின்றனர்.



(தமிழீழத்தில் நடைபெற்ற சிங்களக் குடியேற்றங்களை விளக்கும் படம்)

## ஆட்சி மொழிச் சட்டம்.

அடுத்து ஆட்சியாளர்கள் தமிழர்களின் தாய் மொழியை நாட்டின் இரண்டாம்தர மொழியாக்கி சிங்களத்தை நாடு முழுவதற்கும் ஆட்சி மொழியாக்கினார்கள். சிங்களத் திணிப்பை எதிர்த்து ஈழத்தில் அமைதி வழியில் மறியல் போராட்டங்களை நடத்திய தமிழ் மக்களையும், தலைவர்களையும் ஆட்சியாளர்கள் குண்டர்களை ஏவிப் பயங்கரமாகத் தாக்கி இரத்த ஆறு ஓட வைத்து, தமிழர் இரத்தத்தின் மீது தனிச்சிங்களச் சட்டத்தை அமுல்படுத்தினர்.

## பொருளாதார புறக்கணிப்பு.

அடுத்து பொருளாதார ரீதியில் தமிழ் மக்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டனர். வெள்ளையர் கையில் இருந்த ஆட்சியதிகாரம் சிங்களவர் கைகளுக்கு மாறியதன்பின், நாட்டில் அமைக்கப்பட்ட 400 க்கும் அதிகமான தொழிற் சாலைகளில் ஒன்று கூட தமிழ்ப் பகுதிகளில் அமைக்கப்படவில்லை. அரசு வேலைவாய்ப்புக்களில் 2% தானும் தமிழர்களுக்குத் தரப்படவில்லை. தமிழ்ப் பகுதிகளிலுள்ள பொருளாதார வளங்கள் திட்டமிட்டுச் சிங்கள ஆட்சியா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளரால் குறையாடப்பட்டன. உதாரணமாக தமிழ்ப் பகுதிகளில் உள்ள சிமெந்துக்குத் தேவையான மூலப் பொருளான சுண்ணாம்புக் கற்களைச் சிங்களப் பகுதிக்கு எடுத்துச் சென்று அங்கு சிமெண்ட் ஆலைகளை அமைத்து சிங்களவர்களுக்கு வேலைவாய்ப்பு தேடித்தந்தது சிங்கள அரசு. தமிழ்ப் பகுதிகளில் உள்ள மீன் வளப்பகுதியில் சிங்கள மீனவர்களைக் குடியமர்த்திக் காலம் காலமாக மீன்பிடித்து வந்த தமிழ் மீனவர்களின் தொழில் வாய்ப்பை அபகரித்துக் கொண்டனர். தமிழ்ப் பகுதிகளில் உள்ள வளமான விவசாய நிலங்களில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர். தமிழ் விவசாயிகளின் அறுவடைக்காலங்களில் அதே பொருட்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து உற்பத்திச் செலவுதானும் தமிழ் விவசாயிகளுக்குக் கிடைக்காமற் செய்தனர் சிங்கள ஆட்சியாளர். இவ்வாறு பொருளாதார ரீதியில் எல்லா மட்டத்திலும் தமிழர்கள் சுரண்டப்பட்டனர் - புறக்கணிக்கப்பட்டனர்.

## கல்வியில் தரப்படுத்தல்.

தமிழ் மாணவர்களுக்கு கல்வி உரிமையும் மறுக்கப்பட்டது. 30 ஆண்டுகளாக ஆட்சியை அலங்கரித்தும் தமிழ் மாணவர் கல்வித்தரத்திற்கேற்ப சிங்கள மாணவரின் கல்வித்தரத்தை உயர்த்திச் சமப்படுத்த முடியாத சிங்கள ஆட்சியாளர்கள் செருப்புக்கேற்ப காலை வெட்டுவது போல - சிங்கள மாணவர் கல்வித்தரத்துக்கு மேல் தமிழ் மாணவர் கல்வித்தரம் இருக்கக்கூடாது என்று தமிழ் மாணவர் கல்வித்தரத்தைக் குறைப்பதன் மூலம் சிங்கள மாணவர்களின் கல்வித்தரத்தைச் சமப்படுத்தும்முயற்சியாக தரப்படுத்தல் என்னும் கல்வித் திட்டத்தை உயர்கல்வியில் செயற்படுத்தினர். இதை எதிர்த்து மாணவர்கள் நடத்திய அமைதி வழி எதிர்ப்புகள் பயனற்றுப் போயின. தமிழர்களது கலை, கலாச்சார மதவழிபாட்டு உரிமைகள் கூட சட்டபூர்வமாகவும், சட்டத்துக்கு அப்பாற்பட்ட முறையிலும் பறிக்கப்பட்டன. இலங்கையின் முதன்மையான மதமாக பௌத்த மதத்தைப் பிரகடனப்படுத்தி அதன் மூலம் தமிழர்களின் வழிபாட்டு மதங்கள் புறக்கணிக்கப்பட்டு, பௌத்த மதம் மட்டும் அரச மதமாக்கப்பட்டது; அரசினால் பாதுகாக்கப்பட வேண்டிய மதம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. தமிழர்களின் வழிபாட்டுத் தலங்களான பள்ளிவாசல்கள் கோவில்களில் வழிபாடு நடத்துபவர்கள் ஆட்சியாளரின் ஆயுதப்படையினரால் தெரு நாய்கள் போலச் சுட்டுக்கொல்லப்பட்டனர். சிங்கள காடையர் கிறிஸ்த்துவ தேவாலயங்களுக்குள் புகுந்து இனவாதத்தைக் கிளப்பி கலாட்டா பண்ணி தமிழ் வழிபாடுகளை நிறுத்தினர். தமிழர்களின் கலாச்சார விழாக்களுக்கு அனுமதிமறுக்கப்பட்டன.

பெரும்பான்மைச் சிங்கள மக்களுடன் சமாதானத்துடனும் ஒற்றுமையுடனும் இணைந்து வாழ்வதற்குச் சாத்தியமான சகல நடவடிக்கைகளையும் தமிழர்கள் மேற்கொண்டிருந்தனர். ஆனால், தமிழ் மக்களின் நியாயமான - சட்டபூர்வமான கோரிக்கைகள் அனைத்தும் சிங்கள ஆட்சியாளரால் முற்று முழுதாக நிராகரிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து, சிங்கள ஆட்சியாளர்களின் அநீதிகளை எதிர்த்துத் தமிழ் மக்கள் தமது அடிப்படை மனித உரிமைகளை வென்றெடுப்பதற்காக கால் நூற்றாண்டு காலமாக சாத்வீக முறையிலேயே போராட்டத்தில் ஈடுபட்டனர். சிங்கள ஆட்சியாளர்கள் அந்தச் சாத்வீகப் போராட்டங்களுக்கு மதிப்பளிக்காதது மட்டுமன்றி, சாதவீகப் போராளிகளின் மீது சிங்களக் குண்டர்களை ஏவித் தாக்குதல்களை நடத்தினர். அத்தோடு தமிழ் மக்களின் உரிமைக் கிளர்ச்சிகளைக் காலத்துக்குக் காலம் அடக்கியொடுக்கி அவர்களைப் பயமுறுத்திப் பணிய வைக்கவெனத் தமது பிரச்சார சாதனங்களான வானொலி, பத்திரிகைகளின் உதவியுடன் சிங்கள வெறியர்களைத் தூண்டி தமிழ் மக்களுக்கு எதிராகக் காலத்துக்குக் காலம் கலவரங்களையும் ஏற்படுத்தினர்.

## அமைதி வழிக் கிளர்ச்சிகள்.

★ 1956ம் ஆண்டு, சிங்கள மொழி மட்டும் ஆட்சி மொழியாக்கப்பட்டு தமிழ்மொழி உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில், அதை எதிர்த்து தமிழ் மொழி உரிமைகளுக்கா கொழும்பு காலிமுகத் திடலில் அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் இருந்த தமிழ்த் தலைவர்கள் மீதும் தொண்டர்கள் மீதும் அன்றைய எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க அரசு சிங்களக் குண்டர்களை ஏவித் தாக்குதலை மேற்கொண்டது. அரசின் ஆயுதப் படையினர் சிங்களக் குண்டர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டனர்.

★ 1958ம் ஆண்டு, தமிழ்ப்பகுதிகளில் மோட்டார் வாகனங்களின் இலக்கத் தகடுகளில் சிங்கள ஸ்ரீ எழுத்தைப் பொறிக்க வேண்டுமென்ற ஆட்சியாளர்களின் சட்டத்தை எதிர்த்து அமைதி வழியில் சிங்கள ஸ்ரீ எழுத்து அழிப்பு போராட்டத்தை மேற்கொண்ட தமிழர்களைச் சிறையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டைத்துவிட்டு அதைச் சாட்டாக வைத்து நாடு முழுவதிலுமுள்ள தமிழ் மக்கள் மீது சிங்களக் குண்டர்களை ஏவி தாக்குதலை மேற்கொண்டனர். இந்த இனவெறித் தாக்குதலின் போது பாணந்துறை என்னுமிடத்தில் இந்துக்கோவில் அர்ச்சகர் ஒருவர் உயிரோடு தீ மூட்டிக் கொளுத்தப்பட்டார். கொதிக்கும் தார் பிப்பாய்க்குள் பச்சிளம் பாலகர்கள் அமுக்கிக் கொல்லப்பட்டனர். இத் தாக்குதலின் போது ஆயிரக்கணக்கான தமிழர்கள் நாடு முழுவதிலும் கொல்லப்பட்டனர்.

★ 1961ல் தமிழ்ப்பகுதி நீதிமன்றங்களின் நிர்வாகத்தில் சிங்கள மொழியைத் திணித்ததை எதிர்த்தும், தமிழர் வாழும் மாவட்டங்களில் நிர்வாக மொழியாக தமிழ் மொழியே இருக்க வேண்டும் என்று கோரியும் அமைதி வழியில் மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகங்களின் முன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழர்களை அடக்க முதன் முறையாக சிங்கள இராணுவம் தமிழ்ப்பகுதிகளில் கொண்டுவந்து குவிக்கப்பட்டது. அமைதி வழியில் மறியல் செய்தவர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்.



(1961 ல் மாவட்ட அரச அதிபர் அலுவலகங்களின் முன் நடத்தப்பட்ட சத்தியாக்கிரகம். திருக்கோணமலை)

## அடிமைச் சாசனம்.

இவற்றோடு நிறுத்தாத சிங்கள ஆட்சியாளர்கள் 1972ம் ஆண்டு மே மாதம் 22ம் நாள், தமிழ் மக்களுக்கு அதுவரை இருந்து வந்த அரைகுறைப் பாதுகாப்புக்களைக் கூட அரசியலமைப்பிலிருந்து நீக்கி, தமிழ் மக்களுக்கு எவ்வித உரிமையும் இல்லாத, தமிழர்களை இரண்டாந்தர குடிமக்களாக்கும் புது அரசியலமைப்பை உருவாக்கி இலங்கையை சிங்கள பௌத்த குடியரசாகப் பிரகடனப்படுத்தினர். இந்த அரசியலமைப்பைத் தயாரிக்கவென ஏற்படுத்தப்பட்ட அரசியல் நிர்ணய சபையில் தமிழர்கள் சார்பில் விடுக்கப்பட்ட ஆலோசனைகள், திருத்தங்கள் எவையும் பரிசீலனைக்குக்கூட எடுத்துக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்டன. எனவே தமிழர் கட்சிப் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையை விட்டு வெளிநடப்புச் செய்தனர். பின்னர் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் இல்லாத அரசியல் நிர்ணயசபை அங்கீகாரத்துடன் தமிழ் மக்களை இரண்டாம்தரக் குடிமக்களாக்கும் புதிய அரசியலமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

## நவீன ஜாலியன் வாலாபாக்.

★ 1974 ம் ஆண்டிலிருந்து புதிய முறையில் தமிழினத்தை அடக்கிவிடச் சிங்கள ஆட்சியாளர்கள் முன்வந்தனர். தமிழ் மக்களை சுட்டுத்தள்ளும் பொலிசாருக்கு உடனடியாக பதவி உயர்வு வழங்கி அவர்களை உற்சாகப்படுத்தினர் சிங்கள ஆட்சியாளர்கள். இதன் விளைவு 1974ம் ஆண்டு, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டில் தமிழின் சுவை கேட்டுக்கொண்டிருந்த ஒன்பது தமிழர்கள் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அந்த வெறியாட்டத்துக்குப் பொறுப்பாக இருந்த சந்திரசேகரா என்னும் சிங்கள உதவிப் பொலிஸ் அதிகாரிக்கு உடனடியாகப் பதவியுயர்வு வழங்கி அவனைப் பொலிஸ் அதிபராக்கியது சிங்கள அரசு.

★ 1976 பெப்ரவரி 2ம் நாள், புத்தளம் பெரிய பள்ளிவாசலில் தொழுகை நடத்திய ஏழு இஸ்லாமியத் தமிழர்கள். நல்லூர்க் கந்தனை வழிபட்டு விட்டுத் திரும்பிய பரராசா, மலையகத் தமிழன் (இந்திய வம்சாவழி) சிவனு இலட்சுமணன், யாழ் வீதியில் இரண்டு தமிழர்கள், ரெயில் வண்டியில் பயணம் செய்த தமிழன், தமது வீடுகளில் உறங்கிக்கொண்டிருந்த ஏழு தமிழிளைஞர்கள், கடற்கரையில் காற்று வாங்க வந்த தமிழன், கொழும்பு வேகந்தை பள்ளிவாசலில் தொழுகை நடத்திய மூவர் என ஏராளமான தமிழர்களை சிங்கள இராணுவத்தினரும், பொலிசாரும் சுட்டுக் கொன்று சிங்கள அரசின் பாராட்டையும் பதவியுயர்வையும் பெற்றதோடு தமக்குப் பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றங்களையும் பெற்றுக்கொண்டனர்.

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




''ஈழம்'' தமிழர்களின் பூர்வீகத் தாயகம் என்பதை சிங்கள பௌத்தர்களின் வரலாறு கூறும் ''மகாவம்சம்'' மறைக்க முயன்றாலும் வரலாற்றுச் சான்றுகளும், பழந்தமிழ் இலக்கியங்களும் புடமிட்டுக் காட்டுகின்றன. தமிழ் மணம் பரவிக்கொண்டிருந்த ஈழத்திலே வட இந்தியாவிலிருந்து துஷ்டச் செயல்களைச் செய்தமைக்காக தந்தையால் நாடுகடத்தப்பட்ட விஜயனும், அவனது நண்பர்களும் வந்திறங்கினார்கள். வந்தாரை வரவேற்கும் சிறந்த பண்பின் சொந்தக்காரர்கள் வாழ்ந்த ஈழமண் அவர்களுக்குத் தஞ்சம் கொடுத்தது. இவற்றையெல்லாம் மூடிமறைத்து, தஞ்சமளித்த மண்ணின் சொந்தக்காரரையே வந்தேறுகுடி என்று கூறுமளவுக்கு வரலாறு திரித்துக் கூறப்படுகிறது.

ஈழத்தின் உண்மையான பழங்கால வரலாறு வெளிக்கொண்டுவரப்பட வேண்டுமானால் தேரவாத பௌத்தத்தினதும், மகாவிகாரையினதும் புகழ் பாடும் புராணமான மகாவம்சத்தை, ஆயிரமாண்டுகளுக்குமேல் செவிவழிக் கேட்ட ஒருதலைப்பட்சமான செய்திகளின் தொகுப்பான மகாவம்சத்தை மையமாகக்கொண்ட வரலாற்று ஆய்வுப்போக்கை எமது வரலாற்று அறிஞர்கள் விலக்கிக்கொள்ளவேண்டும். எமது மண்ணின் மகிமையுள்ள வரலாற்று ஆதாரங்களை வெளிக்கொண்டுவரவேண்டும். மகாவம்சத்துக்கு முற்பட்டகால வரலாற்றையும் ஆய்வு செய்ய முன் வரவேண்டும்.

## சங்ககாலமும் ஈழமும்.

வடவேங்கட(திருப்பதி) மலைதான் தமிழ் கூறும் நல்லுலகின் வடக்கெல்லை எனவும், தென்குமரியைத் தெற்கெல்லை எனவும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியத்துக்கு சிறப்புப் பாயிரம் வழங்கிய அவரது முதன் மாணாக்கராகிய பனம்பாரனார்,

'வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகத்து'

என்று சிறப்புப் பாயிரத்தின் முதலடியிலேயே கூறியுள்ளார். அவர் தமிழகத்தின் தெற்கெல்லையை குமரி என்று குறிப்பிட்டாரே தவிர, குமரிமுனை என்று கூறவில்லை. இன்றைய குமரிமுனைக்குத் தெற்கே அன்றிருந்த பெரும் நிலப்பரப்புக்கப்பால் பாய்ந்த குமரியாற்றைத்தான் அவர் குறிப்பிட்டார் என்றுதான் கொள்ளவேண்டும்.

ஏனெனில், இன்றைய தமிழகத்துக்குத் தெற்கே பாண்டியராட்சிக்குட்பட்ட ஏழ்பனை நாடு, ஏழ்தெங்கு நாடு உட்பட 49 நாடுகளைக் கொண்ட ஒரு பெரிய நிலப்பரப்பாகச் சங்க காலத் தமிழகம் இருந்த தென்றும், பின்னர் கடல்கோளினால் அப் பகுதிகள் கடலினுள் மூழ்கி விட்டதென்றும் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்குநல்லார் குறிப்பிட்டிருக்கின்றார். குமரி ஆறு பாய்ந்த அந்தப் பெரிய நிலப்பரப்பு கடலினுள் மூழ்கியதைத்தான்,

''பஃறுளி யாற்றுடன் பன்மலைய
டுக்கத்துக் குமரிக் கோடும்
கொடுங்கடல் கொள்ள''

என்று சிலப்பதிகாரம் (11:19-20) கூறுகின்றது

தென்னிந்தியாவுக்குத் தெற்கே பரந்திருந்த லெமூரியாவிற்றான் முதன்முதல் மக்களினம் தோன்றிற்று எனவும், அவ் இனமே தமிழ்நாட்டின் ஆதிக்குடிகள் எனவும் லெமூரியாக் கொள்கையினர் கருதுவர். லெமூரியாக் கண்டத்தில் வாழ்ந்துவந்த மக்களின் வழிவந்தவர்கள் இப்போது தென்னிந்தியாவிலும், இலங்கையிலும், கிழக்கிந்திய தீவுகளிலும் வாழ்ந்துவருகிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

இவர்களிடம் இன ஒற்றுமை, மக்கள் உடற்கூறு ஒற்றுமை, மொழி அமைப்பு ஒற்றுமை ஆகியவை காணப்படுகின்றன என்று வரலாற்றாசிரியரான டாக்டர் கே. கே. பிள்ளை அவர்கள் கூறுகிறார்கள் (தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்)

இவ்வாறு, கடல்கொண்ட தென்நாடுதான் குமரிக் கண்டம் என்றும், லெமூரியா என்றும் வரலாற்றறிஞர்களால் குறிப்பிடப்படுகிறது. இக் கடல்கோள் பற்றி காலவழிச் செய்திக் கோவையான மகாவம்சமும் எடுத்துக் கூறுகிறது.

மறைந்துபோன குமரிக்கண்டத்திலிருந்த 49 நாடுகளில் ஏனைய நாடுகளெல்லாம் அழிந்துபட, ஏழ்பனை நாட்டின் ஒருபகுதி ஒரு தீவாக மாறியதென்றும், அதனால்தான் அத்தீவு ஈழம் என்ற பெயர் பெற்றதாகவும் வரலாற்றறிஞர்கள் பலர் கருதுகின்றனர். ஏழ்பனை நாடு என்ற பெயரே ஈழம் எனத் திரிவடைந்ததாகவும் முதலியார் இராசநாயகம் (யாழ்ப்பாணச் சரித்திரம் அதி : 2) குறிப்பிடுகின்றார். தென்னிந்தியாவைப்பற்றி எழுதும் கிரேக்க அறிஞர் 'மெகஸ்தெனிஸ்' இலங்கையை 'தப்பிரபனே' என்று கூறுவதுடன், அஃது இந்தியாவினின்று தாமிரபரணி என்ற பொருனை ஆற்றினால் பிரிக்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

சங்ககாலத் தமிழகம்



தமிழகத்துக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள கடற்பகுதி அன்று, நிலப்பகுதியாக இருந்த காலத்தில், அந்த நிலத்தை ஊடறுத்து இலங்கையில் உள்ள புத்தளம்வரை தமிழகத்திலுள்ள தாமிரபரணி ஆறு பாய்ந்திருக்க வேண்டும். இலங்கையில் விஜயன் வந்திறங்கிய தாகக் கூறப்படும் புத்தளத்துக்கருகே உள்ள பகுதி தான் தப்ரபனே என்று பல வரலாற்றறிஞர்கள் கருதுகிறார்கள்.

விஜயன் இலங்கையில் வந்திறங்கிய இடம் தம்பபாணி என்று மகாவம்சம் கூறுகிறது. (6:47)

சிந்துவெளி நாகரீகத்தின் சொந்தக்காரர்களான தமிழர்கள் முதலாம், இரண்டாம் தமிழ்ச்சங்க காலங்களிலே தென்மதுரையும், கபாடபுரமும் உள்ளிட்ட குமரிக்கண்டத்தில் சிறப்புற்று வாழ்ந்ததை வரலாற்றுக் குறிப்புக்களும், சங்க இலக்கியங்களும் சுட்டிக்காட்டி நிற்கின்றன. கடைச்சங்கம் இருந்த பாண்டி நாட்டில் நிலப்பரப்பு கி. மு. 2500 அளவில் கடல்கொள்ளப்பட்டபோது, ஈழத்தின் பெரும் பகுதியையும் கடல்கொண்டது.

*''நாகநன் னாட்டு நானூறு யோசனை*
*வியன்பா தலத்து வீழ்ந்து கேடெய்தும்''*

எனும் மணிமேகலை வரிகள் (9 ; 21 - 22) குமரிக்கண்டத்தின் கடல்கொண்ட பகுதியில் நாகநாடு இருந்தது என்பதையும், அந்த நாடு நானூறு யோசனை (ஏறத்தாழ 4000 மைல்கள்) அளவுக்கு பரந்துபட்ட பெரிய நாடாக விளங்கியது என்பதையும் உறுதிசெய்கிறது.

சிங்களவர்களின் முன்னோடியான விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே, ஈழத்தில் நாகர்கள் சிறப்புற ஆட்சி செலுத்திவந்ததாகவும், புத்தர் இரண்டாவது தடவையாக இலங்கைக்கு வந்தபோது நாகத்வீபம் என்னும் நாக நாட்டில் நாகமன்னர் குடும்பத்தில் அரசுகட்டில் தொடர்பாக எழுந்த பிணக்கைத் தீர்த்துவைத்ததாகவும் மகாவம்சம் (1 : 45 - 70) கூறுகிறது. இதை மணிமேகலையும்,

*''வேக வெந்திறல் நாகநாட் டரசர்*
*சினமாசு ஒழித்து, மனமாசு தீர்த்தாங்கு;*
*அறச்செவி திறந்து, மறச்செவி அடைத்துப்*
*பிறவிப்பிணி மருத்துவன் இருந்தறம்*
*உரைக்கும்''*

என்ற பாடல் வரிகளின் மூலம் (9 : 58-61) உறுதிசெய்கிறது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்த நாகநாடு 500 யோசனைக்குப் பரந்திருந்தது என்று மகாவம்சம் கூறுகிறது (1:48)

புத்தர் மூன்றாவது தடவையாக இலங்கைக்கு வந்தபோது கல்யாணியில் (இன்று தென்னிலங்கையில் உள்ள களனியில்) நாகர்கள் அரசு இருந்ததாகவும், அந்த நாட்டு மன்னனும் நாகத்வீப மன்னனும் உறவினர்கள் என்றும் மகாவம்சத்திலேயே (1 : 63 - 78) கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து விஜயன் வருகைக்கு முன்னர் இலங்கைத்தீவின் வடபகுதியிலும், தென்பகுதியிலும் நாகர்கள் ஆட்சிநடத்திக்கொண்டிருந்தார்கள் என்பது தெளிவாகிறது.



புத்தர் மூன்றாவது தடவை இலங்கைக்கு வந்து சென்று 37 ஆண்டுகளின் பின்னர்தான் விஜயன் இலங்கைக்குவந்தான் என்பதும் மகாவம்சத்தின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. எனவே, சிங்களவர்களின் முன்னோடியான விஜயன் வருவதற்கு நீண்டகாலத்துக்கு முன்னரே இலங்கைத்தீவு முழுவதும் நாகர் குடிமக்கள் சிறப்புற வாழ்ந்து, ஆட்சி நடத்தி வந்தார்கள் என்பது ஐயத்துக்கு இடமற்றது.

## நாகர்கள் தமிழர்களே

கடல்கொண்ட குமரிக்கண்டத்திலும், இலங்கையிலும் அன்று வாழ்ந்த நாகர்கள் தமிழ்க் குடிமக்களே என்பதை பல்வேறு வரலாற்றுச் சான்றுகளும், இலக்கிய நூல்களும் எடுத்து இயம்புகின்றன. நாகர்களுக்கும் தமிழக மக்களுக்கும் இடையே திருமணத் தொடர்புகள் நீண்டகாலமாக இருந்துவந்திருக்கிறது. நாகர்-சோழர்களுக்கிடையேயான திருமணத் தொடர்பு பற்றி மணிமேகலையும் (24 : 28 - 60) எடுத்தியம்புகிறது.

சங்ககாலத்தில் சங்கத் தமிழ்ப் பாக்களைப் பாடிய நாகர் என்னும் பெயர் கொண்ட 18 புலவர்களைப் பற்றி சங்கப் புலவர் வரிசையிலிருந்து எம்மால் அறியமுடிகிறது. முகற் சங்ககாலத்து முரிஞ்சியூர் முடிநாகனார் தொடக்கம் அம்மெய்யனாகனார், இளநாகனார், இனிசந்தநாகனார், தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார், தீன்மதிநாகனார், நன்நாகனார், மதுரைகடையத்தார் மகன் வெண்ணாகனார், மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார், மதுரைக் கொல்லன் வெண்ணாகனார், மதுரைப் பூதனிளநாகனார், மதுரைப் பெருமருதிளநாகனார், மருதனிளநாகனார், முப்பேர் நாகனார், விரிச்சியூர் நன்நாகனார், வெள்ளைக்குடிநாகனார் எனும் பதினாறு ஆண்பாற் புலவர்களும், அஞ்சியத்தை மகள் நாகையார், நன்நாகையார் எனும் இரு பெண்பாற் புலவர்களும் நாகர்குடிவழி வந்த தமிழர்களே. கல்வியறிவிலும், நாகரீகத்திலும் இவர்கள் மிகச் சிறந்தவர்களாகவே விளங்கியிருக்கின்றனர். ஏனெனில், தமிழில் பெரும் புலமை இல்லாதவர்களாயிருந்தால் இவர்களால் சங்கத் தமிழ்ப் பாடல்களை இயற்றியிருக்க முடியாது.

அதுமட்டுமன்றி, ஈழத்துப் பூதந்தேவனார் என்னும் புலவரும் சங்கத் தமிழ்ப் பாடல்களைப் பாடியுள்ளார். ஈழத்தைச் சேர்ந்தவரான இப்புலவரின் தமிழ்ப் புலமையே ஈழத்தில் அவர் காலத்துக்கு முன்பே (சங்ககாலத்துக்கு முன்பே) தமிழ்மொழி சிறப்புற விளங்கியமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

நாகபுரம், நாகத்வீபம், நாகநாடு போன்ற பல இடப் பெயர்கள் சங்க காலத்துக்கு முன்னரே தமிழகத்திலும், ஈழத்திலும் வழக்கில் இருந்திருக்கின்றன. அதுபோலவே நாகபட்டினம், நாகர்கோயில் என தமிழகத்திலும், ஈழத்திலும் நாக என்று தொடங்கும் இடப் பெயர்கள் இருப்பதை இன்றும் அவதானிக்கலாம்.

அதுதவிர, நாக வழிபாடு தமிழகத்திலும், ஈழத்திலும் இன்றும் வழக்கிலிருந்து வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாகபூசனி அம்பாள், நாகதம்பிரான் என வழிபாட்டுத் தலங்கள் இன்றும் எமது பகுதிகளில் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

மேலும், நாகன், நாகி, நாகமுத்து, நாகநாதன், நாகரத்தினம்; நாகமணி, நாகம்மாள், நாகம்மை, நாகப்பன், நாகலிங்கம், நாகராஜா நாகேந்திரன் என ஏராளமான நாக என்று தொடங்கும் பெயர்கள் தமிழக, தமிழீழ மக்களால் இன்றும் பயன்படுத்தப்பட்டு வருவதும் நோக்கற்பாலது.

பூம்புகாரின் சிறப்பைக் கூறப்புறப்பட்ட இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில்,

"நாகநீள் நகரொடு நாக நாடு-அதனொடு
போகம், நீள் புகழ்மன்னும் புகார்நகர்!"

என்னும் அடிகள் மூலம் (1:21-22) நாக நாட்டையொத்தது புகார் நகர் என்று கூறியிருப்பதிலிருந்து, அன்றைய நாகநாட்டின் சிறப்பு நன்கு வெளிப்படுகின்றது.

கடல்கோளுக்கு முன் குமரிக்கண்டத்தில் வாழ்ந்த நாகர்களுக்கும் தமிழகத்தவர்களுக்கும் இடையே மொழி, பண்பாடு, பழக்கவழக்கம் என்பவற்றில் ஓர் ஒற்றுமை இருந்ததை எம்மால் அறிய முடிகிறது. இவற்றின் பூர்வீகத் தன்மையை ஆராய்ந்து பார்க்குமிடத்து கடல் கோளினால் பிரிக்கப்பட்ட பண்டைய தமிழகமே இன்றைய தமிழகமும் ஈழமும் என்ற முடிவுக்கு வரமுடிகிறது. இதனால், நாகர்கள் பூர்வீகத் தமிழ் மக்களின் ஒரு குடிப் பிரிவினரே என்பதும், ஈழம் தமிழர்களின் தாயகந்தான் என்பதும் தெள்ளத் தெளிவாகிறது.

## சிவ வழிபாடு தமிழர் பண்பாடு

விஜயன் வருகைக்கு முன்னரே ஈழத்தில் சிவவழிபாடு வழக்கிலிருந்திருக்கிறது. மாதோட்டத்தில் அமைந்திருந்த திருக்கேதீஸ்வரர் ஆலயத்தை விஜயன் புனருத்தாரணம் செய்தான் என்று "யாழ்ப்பாண வைபவமாலை" குறிப்பிடுகிறது. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில், வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனாரும் பாலாவிக் கரையிலமைந்துள்ள திருக்கேதீஸ்வரர் ஆலயத்தைச் சிறப்பித்துக் கூறுவதிலிருந்து, அது தொன்மைவாய்ந்த ஆலயம் என்பது அறியக் கூடியதாக இருக்கிறது.

கி. மு. 1300ம் ஆண்டு, மனுராசா அல்லது மாணிக்கராசா எனும் தமிழ் மன்னன் இலங்கையை ஆண்டான் என்றும், அவன்தான் திருக்கோணேஸ்வரர் கோயிலைக் கட்டுவித்தான் என்றும் கோணேசர் கல்வெட்டுக் கூறுகிறது. (அஜன்டா நூல்நிலையச் சுவடி, கொண்டு விஸ்ரா பக். 51) கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் குளக்கோட்டு மன்னனால் அக் கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டதாகவும் வரலாறு சான்றுபகர்கிறது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் மன்னன் இராவணனால் வழிபடப்பட்ட சிவத்தலம் திருக்கோணேஸ்வரம் என புராண இதிகாசங்கள் எடுத்தியம்புகின்றன. திருக்கோணேஸ்வரரை பழந்தமிழ் மன்னன் இராவணன் வழிபட்டுவந்தான் என்பதை கி. பி. ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தரும் தன் தேவாரப் பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். தமிழ்க் கடவுள் எனப் போற்றப்படும் முருகனுக்கு தமிழ்மக்கள் தென்னிலங்கை கதிர்காமத்திலுள்ள மாணிக்ககங்கைக்கரையில் கோயிலமைத்து நீண்டகாலத்துக்கு முன்னிருந்தே வழிபட்டுவருகின்றனர்.

இலங்கைத் தீவின் கிழக்குக் கரையோரமாக திருக்கோணேஸ்வரம், மாமாங்கேஸ்வரம், மேற்குக் கரையோரமாக திருக்கேதீஸ்வரம் முன்னேஸ்வரம், வடக்குக் கரையில் நகுலேஸ்வரம், தெற்குக் கரையில் தேவேந்திரமுனையில் உள்ள சந்திரமௌலீஸ்வரர் ஆலயம் என பல்லாயிரம் ஆண்டுகளாகத் துலங்கிவரும் திருத்தலங்கள், பண்டைத் தமிழர் இலங்கைத்தீவு முழுவதிலும் சிவவழிபாட்டைச் சிறப்புற நடத்தி வந்ததை உறுதிப்படுத்துகின்றன.

பல்வேறு வகையிலும் தமிழர்கள் ஈழத்தின் பல்வேறு திசைகளிலும் தனித்துவமான சிறந்த பண்பாட்டு, வழிபாட்டு நெறிகளுடன் நாகரீகமாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். விஜயன் வருகைக்கு முன்னரே ஈழத்தின் நாற்றிசையிலும் தமது பண்பாட்டுச் சின்னங்களை நிறுவியிருந்திருக்கின்றனர். ஈழத் தமிழர்கள் கல்வியில் சிறந்தவர்கள்; பண்பாட்டில் உயர்ந்தவர்கள்; உழுதுண்டு வாழ்வதிலும் உயர்ந்த இடத்தைப் பிடித்திருந்தனர். தமது தேவைக்கு அதிகமாக நெல்மணிகள் குவிந்து கிடந்தபோது அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்திருக்கிறார்கள். சோழநாட்டுத் தலைநகரான காவிரிப்பூம் பட்டினத்து அங்காடிக்கு ஈழத்து உணவுப் பொருட்கள் விற்பனைக்குச் சென்றது குறித்து கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப் பாலையில் குறிப்பிட்டுள்ளார்.

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

△ சுதந்திர உணர்வு பெற்று விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கிவரும் தமிழ் மக்களைப் பட்டினி போட்டு, அவர்களை உண வுக்கு ஆலாய்ப் பறக்கவைத்து, உணவுக்காக தங்களிடம் (சிறீலங்கா அரசிடம்) அவர்களை மண்டியிட வைக்கலாம் என்று எதிர்பார்த்துத்தான் சிங்கள அரசு தமிழீழத்தில் பொருளாதாரத் தடையை மேற்கொண்டு வருகிறது. அதுமட்டுமன்றி, தமது பொருளாதாரத் தடையினால் நெருக்கடிக்குள்ளாகும் மக்கள் சுதந்திரத்துக்காகப் போராடும் விடுதலைப்புலிகளை எதிர்க்க முற்படுவார்கள் என்றும் சிங்கள அரசு எதிர்பார்க்கிறது.

O ஈராக் நாடு எங்குள்ளது?

△ மேற்காசியாவில் பாரசீகக் குடாவுக்கு வடக்கே உள்ளது. துருக்கி, ஈரான், குவைத் சவுதிஅரேபியா, ஜோர்டான், சிரியா ஆகிய நாடுகள் அதன் எல்லைநாடுகளாக உள்ளன.

O ஈராக் பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள சிக்கல் என்ன?

△ 1958ஆம் ஆண்டிலிருந்து சுதந்திர நாடாக இருந்துவரும் தனக்குத் தெற்கே உள்ள குவைத் நாட்டை ஈராக் ஆக்கிரமித்து தன்னோடு இணைத்துக்கொண்டுள்ளது.

அந்த ஆக்கிரமிப்பை எதிர்த்து ஐக்கிய நாடுகள் சபை ஈராக்மீது பொருளாதாரத் தடை மேற்கொள்ளப்படவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற வல்லரசு நாடுகள் ஈராக் மீது ஐக்கிய நாடுகள் சபை விதித்த பொருளாதாரத்தடை நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும், சவுதிஅரேபியாவை ஈராக்கின் ஆக்கிரமிப்பு ஆபத்திலிருந்து காப்பாற்றவும், என காரணம் கூறி வளைகுடாப் பகுதியில் இலட்சக்கணக்கில் தமது படைகளைக் கொண்டு வந்து குவித்துள்ளன. ஈராக்கும் சவுதி அரேபியா எல்லைப்பகுதியிலும் குவைத்தினுள்ளும் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான படைகளை நிறுத்தியுள்ளதுடன், குவைத்திலும் ஈராக்கிலும் இருந்து மேலைநாட்டு பிரஜைகளை பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கிறது.

கடைசியாக ஈராக் குவைத்தைவிட்டு வரும் ஜனவரி 15ஆம் திகதிக்குள் தனது படைகளை விலக்கிக்கொள்ளாவிட்டால் ஈராக்மீது யுத்தம் தொடுப்பதற்கு ஐ.நா. சபை தீர்மானித்திருக்கிறது

O இலங்கைத்தீவின் ஆட்சி அதிகாரத்தைப் பிரிட்டிசாரிடமிருந்து 1948 பெப்ரவரி 4இல் பெற்ற சிங்கள ஆட்சியாளரால் பறிக்கப்பட்ட தமிழர் உரிமைகள் எவை;

△

1. ஆட்சி அதிகாரத்தைப் பெற்றவுடன நாட்டின் தேசியக் கொடியாக சிங்கள இனத்தைப் பிரதிபலிக்கும் சிங்கக் கொடி ஆக்கப்பட்டது. அத் தேசியக்கொடியில் தமிழினத்தை பிரதிபலிக்கும் எவ்வித அம்சமும் இருக்கவில்லை.
2. அடுத்து தமிழினத்தின் அரைவாசிமக்களான மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை வாக்குரிமை பறிக்கப்பட்டது.
3. தமிழ் மக்களின் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த நிலங்கள் சிங்களக் குடியேற்றங்களினால் அபகரிக்கப்பட்டன.
4. நாட்டின் ஆட்சி மொழியாக சிங்களமொழி ஆக்கப்பட்டு தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டது.
5. நாட்டின் நீதி மன்ற நிர்வாக மொழியாகவும் சிங்கள மொழி அறிவிக்கப்பட்டது.
6. தமிழ் மக்கள் தொழில் வாய்ப்பு பதவி உயர்வு என்பனவற்றில் புறக்கணிக்கப்பட்டனர்.
7. தமிழர் பகுதி பொருளாதார அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்டது.
8. தமிழ் மாணவர்கள் உயர் கல்வி தரப்படுத்தல் மூலம் மட்டுப்படுத்தப்பட்டது.
9. 1972இல் நாட்டை குடியரசாகப் பிரகடனப்படுத்தி ஏற்படுத்தப்பட்ட புதிய அரசியலமைப்பில் தமிழ்மக்களின் எஞ்சியிருந்த உரிமைகளும் நீக்கப்பட்டன.

O குமரிக் கண்டம் என்றால் என்ன?

இன்றைய தென்இந்தியா, இலங்கைத்தீவு என்பவற்றோடு இந்துமகா சமுத்திரத்தில் பரந்துபட்டிருந்த பெரும் நிலப்பரப்பு குமரிக் கண்டம் அல்லது லெமூரியாக் கண்டம் என அழைக்கப்படுகிறது. அது கிழக்கு மேற்காக இன்றைய இந்தியா, ஜாவா சுமாத்திராவிலிருந்து ஆபிரிக்காவரை பரந்து ஒரே நிலப்பரப்பாக (கண்டமாக) இருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தப்பகுதியில்தான் முதன் முதல் மக்களினம் தோன்றியது எனவும், அந்த இனமே தமிழ் நாட்டின் ஆதிக் குடிகள் எனவும் அறிஞர்கள் கருதுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்